988 BRL. 55 54. 4003

OM.

SRI KRISHNARPANA-MASTU.

# ARJUNA SANYASI

*(A Classical Tamil Play)*

ACL TDD 00305

BY

J. VENKATASUBRAMANIA BARATI,

***Author of* "முப்பக்தி கீதங்கள்"**

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI.

V. ... KASIVISWANATHAN CHETTIAR PAGANERI.

MADRAS

THE INDIA PRINTING WORKS

1920

Price As. 12] *All Rights Reserved.* [Postage extra.

ஓம்

காட்டுபுத்தூர் ஜமீன்தார் ஹைஸ்கூல்

தமிழ் பண்டிதர்

ம-ா-ா-ஸ்ரீ மா. கோவிந்தசாமி பிள்ளையவர்கள்

இந்நூலை வியந்து இயற்றிய,

# நேரிசை யாசிரியப்பா.

தெண்டிரைக்கடல் சூழ் செகமதில் வாழ்வோர்
பண்டை நம்மிந்தியர் பான்மை யறிந்திடக்
கைவிளங்குறுகனி கவின் வெள்ளிடைமலை
மெய்விளங்குறவே விரிக்கு நன்னூலிது
நான்மை வருணரு நண்புடன் வாழ்ந்ததும்
பான்மையினவரவர் ஒழுகிய பண்பும்
பசுவும் புலியும் பகையற வாழும்
அசைவில் செங்கோன்மையும் ஆன்ற கல்வியும்
போரென வீந்த தோட் பொருப்பி னாண்மையும்
சீரமர் மாதர் செவ்விய கற்பும்
தானே தனக்கு நிகரெனத் தழைத்ததும்
வானுலகம் போல் வயங்கிய சீர்மையும்
நவரச மிகவே நவில் சீருற்றது
நவிலுமிந்நூற் பெயர் நாட்டுங்காலை
விரிச்சுணர் வோர்க்கு வியப்பைச் செய்யும்
அருச்சுன சந்யாசிப் பெயரமையும்
இந்நூலியற்றி யோரிது போற் பன்னூல்
முன்னுமியற்றி முடிவு செய்துளரே
ஆரியஞ் செந்தமி ழாங்கிலங்கற்றோர்
சீரிய கவிபல செப்புமாண் பினர்
பாங்குறு சிவகங்கைப்பதி
வேங்கட சுப்ரமண்ய வேதியனே.

**திருவள்ளுவர் நூல் நிலையம்**

# அருச்சுன சந்நியாசி.

## நூன்முகம்.

இந்நூல் படிக்கும் இனியவென் நண்பர்காள்!
பன்னூல் களிலிது பகர் சிறு நூலாம்
பார் தொழு பாரதந் தன்னி லோர் பாகம்
சீர்திகழ் பார்த்தன் தீர்த்தாடனஞ் செய
ரேவதி யனுங்கி யாங் கதிரூபவதியாம்
ஸ்ரீமதி சுபத்திரை காமுகனகிமேற்
சந்யாசமும் உட் சங்கட மேலாய்
அன்னிய ரறியா வச்சுதன் துணையாய்
பலபத்திரனின் பரிவாற் கமலமா
திலகுஞ் செவ்வியள் இனிய சுபத்திரையின்
பன்னசாலையிற் பணி விடை பலவுமக்
கன்னியே செய்துதான் களித்த நாளொருநாள்
தனஞ்செயன் மேலுறு தாங் கொணு வாசையால்
வினவின ளடிகளை விசைய னுறைவிடம்
அடிகளும் யானுன் அருச்சுனரே யெனக்
கடிமணம் புரிந்துநற் கண்ணனின் துணையால்
இந்திரப்ரத்தமே எகுழி கரவாய்
வந்தனன வன்மேல் வலிமிகு முசலி
கபடனிக் கள்வனைக் கட்டுமினெனவே
கபடனுங் கண்ணனுல் கட்டுரை யறிய
விசையன் மாட்டவன் விருப்புற்றவரும்
வசைதனை விட்டு மேல் வந்தனல் விதியென

அருமையாஞ் சுபத்திரைக் கணிசீரெடுத்துப்
பெருமைசேர் பார்த்தனைப் பேறெனப் போற்றினர்
அருந்ததி யனையநம் மருமை சுபத்திரை
பெருந்தகை விசையனைப் பெற்ற நற் கதையை
நாடகமாகவே பாட லோட மைத்தனன்
ஆடல் கொண்டலர்முக ஆழ் கவி வீரர்காள்
வளமொடு பாரதி வகித்த தோர் சீரும்
நலமதைக் கோரியே நால் வகை யாரும்
தத்தந் தொழில்களைத் தடையறச் செய்து
எத்திசையுங் களிப் பேற்றிருந்ததையும்
பாரத நாட்டின் வீரர்கள் பெருமையும்
பாரதப் புதல்வியின் பான்மையும் கல்வியும்
சத்தியஞ் சாந்தந் தங்குசீர் பாரதி
வித்தகி விசயிதாம் விரும்பவே விளங்கி
இணையற்றிருந்ததை இசைத்துங் கண்ணன்
துணையுளார்க் கென்றுந் துயரிலை யென்ற
சத்திய மொழியைச் சாற்று மிந்நூலில்
குற்றந் திருத்திக் குணங் கொளும் பெரியோர்
தளிரடி வணங்குந் தண்டமிழன்பன்
அளி மலி யான்றோரடிபணிந் தேத்தும்
பங்கய மலராள் பதந்தனைப் பாடும்
வெங்கட சுப்பிர மணிய வேதியனே.

## நாடக பாத்திரர்.

நடர்

1. அருச்சுனன் (கதாநாயகன்)
2. கிருஷ்ணன் : தேவகிசுதன். அருச்சுனன் தோழன்
3. பலராமர் : கிருஷ்ணனுக்கு மூத்தோன்

4. சுநந்தன் : ஒரு யதுகவி
5. அதிவீரன் : சேனாதிபதி
6. வாசுகி, சிட்டு : சேவகர்
7. புரோகிதர்
8. இடையர், வீரர், அந்தணர் முதலியோர்.
9. பஜனை கோஷ்டி

நடிகள்

1. சுபத்திரை (கதாநாயகி)
2. சாந்தா (தோழி)
3. தேவகி : சுபத்திரையின் தாயார்
4. உருக்குமணி : கிருஷ்ணனின் மனைவி
5. திரௌபதை : பாண்டவரின் பத்தினி.

இடம் ரேவதி நதிதீரம் : இந்திர ப்ரத்தம்.

## பிரஸ்தாவனை

பிரவேசம். நடன், நடி:

நடன்: சகே ! நாம் கைக்கொண்ட காரியம் கைகூட இசைமடந்தை தன் இணையடி இறைஞ்சுவாம்!

[இருவரும் பாடல்]

வாக்கிற் கரசியாம் வாணியே ! புத்தகீ ! வனஜ நயனீ ! வல்லபீ !
நோக்கென் மீதளி நாவினில் நிற்கும் விநோதினீ! கருணாலயே!
நோக்குந் திசையெலா நிற்குமென் னம்மையே நாவலருஞ் சக்தி தாயே!
ஆக்கும் பிரமனினரிய தோர் துணைவியே! ஆனந்தரூபீ! நமோ!

நடி: நாதா! அன்பு மிகு வாணியை அனவரதஞ் சிந்தித்தால் இன்பமிகு கவியிசை பாடவருள் செய்வாள். கலையே கருத்திற்கணிகலம்.

நடன்: ஆரியே! நம்முன்னொளிரும் வித்வரத்னங்கள் நிறைந்த இச்சபையோரின் மனத்தை யானந்திப்பிக்குமாறு இன்று நாம் நடத்தும் அர்ச்சுன சந்நியாசி யென்னு நாடகத்திற்கனைத்தும் சித்தமாயினவா?

நடி: அனைத்து மாயத்தமா யிருக்கிறது. நம்முன் விளங்கும் சகோதர சகோதரிகள் மகிழ்வெய்த, காதைக் களிப்பிக்கும், கானரசராயும், நேத்ரானந்தஞ்சேர நடிப்பவராயும், மனமுருக்கும் பக்தராயும், கல்வி கேள்விகளில் தேர்ந்தவராயும், நமது நாடக பாத்திரர் நன்கமைந் திருக்கின்றனர்.

நடன்: ஆரியே! இந்நாடகத்தின் வரலாற்றை நாம் நடிக்கும் போதே கனவான்களறிந்து கொள்வார்களாதலின் நாம் கடவுளை வணங்கிக் காரியந் தொடங்குவோம்.

[பாடுகிறார்கள்]

(அனுபந்தம் (1)

நடி: விக்னஹரனாகிய விஸ்வேஸ்வரனைப் பணிந்தே நம் காரியத்தை தொடங்குகிறோமாதலின் நமது கருத்தே ஆகும். ஆதலின் காலதாமதஞ் செய்யாது நாடகத்தைத் தொடங்குவோம்.

நடன்: அப்படியே செய்வோம், வா.

[நிஷ்க்ரமித்தல்]

---

# அருச்சுன சந்நியாசி.

---

## முதல் அங்கம்.

### முதற் களம்.

இடம்; ரேவதி நதிதீரம்    காலம் சூரியோதயம்:

[அருச்சுனன் அந்தணஉருவோடு நாட்டின் வளமையை வியந் துரைத்தல்]

**அருச்:** ஆ! என்ன ஆனந்தம்! இந்நதிதீரம் தேகத்திற் கெத் துணை யாரோக்கிய மாக்குகிறது! இத்தேசத் தந்தண ரின் தவ ஒழுக்கத்தை யென்னென்றுரைப்பேன்! இவர்க ளுடைய வேதகானம் எவ்வளவு இனிமையாய்க் காதில் விழுந்து உடலைப் பூரிக்கச் செய்கிறது!

மணியோசையனைய தொனியுடனே வந்தணர் வேத
　　மகிழக்கீதம்
பிணி பலவேபோக்கு மிந்தப் புண்ணியஞ்செய்
　　சீவநதி பிறங்க ஓங்கி
அணியணியாய்க் கனிப்பொறை யினடிவ்வணங்கு
　　மரக்கிளைமே லமரும் புட்கள்
பணிக்கீதமார்ப்பபணி மயிலாட ஆனந்தம்
　　பரவுநாடே !

ஆ! என்ன நிர்மலமானநதி! இச்சீவ நதியில் முழுகினோ ர்க்குச் சகல ரோகமும் நிவாரண மாகுமென்பதிற் சந்தேக மென்ன? அந்நதிக்கரையில் மடியுடுத்து, நீறணிந்து, உதய சூரியனைப் போன்ற முகத்தினராய்ச்சிலர் ஜபித்துக்கொண்டும், சிலர் அதோ தெரியும் சந்தியாமடங்களில் வேதபாராயணஞ் செய்து கொண்டும், சூரிய நமஸ்காரஞ் செய்துகொண்டும் விளங்கும் அந்தணரைத் தரிசித்தால் முன்னை வினைநீங்கி மறு

மைப்பயன் கிடைக்கும். இவர்களி னொழுக்க மகிமையினு லன்ரோக் கோகுலத்தில் மாதமும்மாரி பொழிந்து, பயிர்களெ ல்லாம் செழித்துக் கோக்களெல்லாங் கொழுத்துக் கறக்குமட் டும் பால் கொடுத்து, நால்வருணத்தாரும் தத்தந் தொழில் களைத்திருப்தியுடன் செய்து, அகமகிழ்ந் திருக்கின்றனர்.

நம்மைச்சுற்றிலும், சூரியன் வெங்கதிரூடுருவிச் செல் லாவண்ணம், நெருக்கமுள்ள, அகன்ற இலைகளைக்கொண்ட இம்மஹா விருக்ஷங்களின், பரந்து, விரிந்து, பழங்களின் பார த்தைத் தாங்கமாட்டாது, கீழே வணங்கிநிற்கும் கிளைகளில், பழத்தையுண்டு, நிர்ப்பயமாய், தாங்களும் வேதியர்களோடு கடவுளின் மகிமையைத் துதிப்பதுபோல், இடைவிடாது, குயில்களும், மற்றபக்ஷிஜாலங்களு மினிமைபாய்ப் பாட, அதற் கிணையாய் மயிற்கணங்களாட, என்றும் வசந்தமா யெழில் தருகின்றதிவ் வளநாடு ! ஆ ! இங்கிலக்கும் பூங்காவனம் என் மனத்தை யீசன்பால் செலுத்துகின்றதே ! ஆ!

(அனுபந்தம் 2)

சுநந்தா ! நம்பாரத நாடே எழில் நிறைந்த சாந்தி பீடம். அதிலுமிக் கோகுலம் அளவிறந்த ஆனந்தத்தை யளிக்கிற தே !

தேன் பொழி சோலை சூழத் திகழ்நில நீர்வளங்கள்
நான்மை சேர்வருணத்தாரு நலமுறச் செழிப்புற்ரோங்கி
மேன்மையா யறிவுசால விளங்கி நூலீத லேய்ந்து
மான்மனுநீதி சேரல் மாதவன் மகிமையன்ரோ ?

இருக்கட்டும், யான்யாத்திரை செய்த விடங்களில் பார் த்த விசேடங்களை யுரைத்தேன், அதேமாதிரி இங்கே தாவ துண்டோ?

சுநந்:—இங்கு கண்ணபிரான் திருவவதரித்து எங்கள் மன்னனையும் சர்வலோக சரணியனையும் விளங்குவதே விரும்பரிய விசேஷமாயிற்றே.

அரு:—கண்ணனை நேரில் அஸ்தினுபுரத்தில் கண்டிருக்கிறேன். அவருடைய கருணை எனக்கென்று முண்டு. மற்றேதாவது விசேஷமுண்டோ? அதோ தெரிகிறதே பூந்தோட்டம், அதிலோர் மாளிகையும் விளங்குகிறது, அது தான் கண்ணனின் அரண்மனையோ?

சுநந்:—அதோ தெரிகிற அரண்மனை உள்ளே இதர புருடர் செல்லாவண்ணம் காக்கப்பட்டு வருகின்றது. என் கன்னிகை, சாந்தை. அதன் கண்ணிருந்து வருவதால், அதன் விருத்தாந் தங்களனைத்து மெனக்குத் தெரியும்.

அரு:—அங்கே யிருப்பது யார்?

சுநந்—எங்களதி பதியாயும் தெய்வமாயும் விளங்கும் கண்ணபிரானுக்குச் சுபத்திரை யென்றோர் சகோதரியிருக்கின்றாள், அவளுடைய திருவடிவை வர்ணிக்க எனக்குச் சக்தியில்லை.

கமல, மா, வடு, மாநீலம் கணைவடி வேனேர் கண்கள் சிமையனற் றனங்களைம்பால் செறியிருணுதல் விற்சேர்க்கை அமலன் வேதன்கை தேர்ந்தே யமைத்த பேரழகு வாய்ந்த கமையவள் கிரீடிக்கேற்ற காரிகை யிவளாமன்றே.

எத்தனையோ ரூபவதிகளைப் பார்த்து, சிரத்தை சிரமேற்கொண்டு கடைசியாய், எல்லோருடைய அழகையுஞ் சேர்த்து சுபத்திரையாய்ச் சிருட்டித் தான் போலும் பிரமன், எத்தனையோ மகாகவிகள் அவளுடைய ரூபத்தை வர்ணித்திருக்கிறார்கள். எத்தனையோ சித்திர வல்லார் வெகு அருமை

யா யெழுதி அநேக தேசாதிபதிகளுக் கனுப்பிப் பரிசளிக்கப் பெற்றிருக்கிறார்கள். அப்படியிருக்க, அவ்வாரணங்கின், வஞ்சியிடையும், நிஷ்களங்கமான, பூரணமதி வதனமும், அதிற்றுலங்கும் லக்ஷிமீகரமும், வில்லனைய புருவமும், வேலனைய கண்களும், குமிழனைய மூக்கும், தேனொழுகு வாயும், பவளம் போல் சிவந்த அதரங்களும், முத்தனைய பற்களும், வண்டு மொய்த்தனைய கூந்தலும், மயில் தோகை போன்ற சாயலும், அம்புஜம் போன்ற தனங்களும், ராஜஹம்சத்தைப் பழித்த நடையும், அனிச்ச மென் மலரினும் மிருதுவான தளிரடிகளும், வர்ணிக்க என்னாவிலடங்காது. இன்னும், குணத்திற் சிறந்த சீலை. சுருக்கமாக, இப்பாவை பார்த்தனுக்கே ஏற்றவளெனில் இன்னுமவளுடைய பெருமையைப் புகழ்வானேன்.

அருச்: ஆஹா! அப்படியா! சரி. இப்பெண்ணின் வர்ணனை நமக்கேன்? இங்கு பௌர்ணமியன் றேதோ விசேடமென்கின்றார்களே.

சுநர்: அன்று நாங்கள் வருடந்தோறும் நடத்தும் ஒரு திருவிழா கொண்டாடப் பெறும். அப்பொழுது கோகுல வாசிகளெல்லாரும், காலையில் மங்கள ஸ்நானஞ்செய்து, புத்தாடைகளணிந்து ஆபரணங்கள் துலங்க, தேவதாராதனைக்கு வேண்டியதனைத்தோடும், ரேவதிக்கு வந்து, பக்தியுடன் திருவாராதனங்களைச் செய்து நைவேத்தியங்கள் சமர்ப்பித்து, அந்தணர்க் கமுதிட்டு தானதருமங்களைத் தெவிட்டச் செய்து, சங்கீதங்களைப் பாடிக் குதூகலமா யிருப்பார்கள். அப்பொழுது சுந்தரவதிகளால் சூழப்பட்டு விளங்கும் சுபத்திரையையுங் காணலாம். தாங்களிவ் வைபவங்களுக்கிருப்பீர்களன்றோ?

அரு: நானுவது. இருப்பதாவது:—ஹஸ்திநபுரத்தில்எனக்குப் பெரிய குடும்பம் மலைபோலிருக்கிறது. தீர்த்தாடனத்திற்குப் புறப்பட்டு மாதமொன்ருகிறது. ஆதலால் அவசியம் நாளையே ஊர்திரும்ப வேண்டும். சம்சாரபந்தமிருக்கும் வரையில் இந்த வைபவங்களை யெல்லாம் பார்க்கக் கொடுத்து வைப்பதுபாக்யவானுக்கே. குடும்ப ஸ்திதி எபபடி யிருக்கிறதோ சஞ்சலமாயிருக்கிறது.

சுநந்: அன்று யாதவரின் ஆனந்தமான கொண்டாட்டங்களைப் பார்த்தாலே எப்படிப்பட்ட மனக் கவலையும் நீங்கும் ஆதலின் தாங்களதற்கிருக்க வேண்டிய தவசியம். தமக்கும் நல்ல உபசாரங்கள் கிடைக்கும்.

அரு: ஏதோ முடியுமாணுல் பார்ப்போம். சரி, நாழிகை யாயிற்று போஜன சமயம் இனி மேற் பிரிவோம்.

சுநந்: நான் போய்வருகிறேன். தேவரீருடைய தரிசனங்கிடைத்தது என்றன் பாக்கியமே. சரி, கிருபையிருக்கவேண்டும், நமஸ்காரம்.

அருச்: மங்களானி பவந்து! [சுநந்தன் நிஷ்க்ரமித்தல்]

ஆ! நமக்கித் தீர்த்தாடனபலன் தீர்க்கமாய்க் கிடைக்குமென்றே நம்புகிறேன். மன்மதனும் இதுதான் சமயமென்று சுபத்திரை யென்னும் பாணத்தைத் தொடுத்தென்னுடன் போர் புரிகிருன். என்னை முற்றும் வென்று, என் ஹிருதயமாகிய தேசத்தைப் பற்றி விட்டான். இருக்கட்டும், காத்திருந்தே இவனை யொருகை பார்க்க வேண்டும்.

சரி பெரிய யோசனைகள் செய்து விட்டோமே. பலராமர் கண்ணிற்படாது கிருஷ்ணனுடைய அரண்மனைக்குச் செல்வ

தெங்ஙனம்? அங்கே சென்றென்ன பயன்? என் மனதைக் கவர்ந்த அவ்வணங்கின் ஆலயத்துள் என்னை விடுவார்களா? அவளைத் தரிசிக்கும் பாக்கியமெனக்குக் கிடைக்குமா?

ஆனல் இதற்கெல்லாம் என் சொந்த உருவோடிருந்தால் முடியாது. இது காறும் வேதியரினுருவைக் கொண்டமையால் நம்மை யொருவருக்குந் தெரியவில்லை. நான் எவ்வேஷத்திற் குந்தகுந்தவ னாகவே யிருக்கிறேன்.

உலகில் காஷாயத்திற்கே கௌரவமதிகம். சந்நியாசிகளை யேஉலகு தெய்வமென வணங்கும். சாதுக்களுக்கே யனைத்தும் சுவாதீனம். ஆதலின் யதியின்வேஷத்தைப் பூண்டால், காஷாயத்தின் மகிமை நம்மை அவளுடைய படுக்கை யறைக்கே நடத்திக்கொண்டு போகும். அவளாலேயே நாம் பூசிக்கப்படுவோம்.

இதோ, ஜடை, திரிதண்டம், கமண்டலம், ஜபமாலை, எல்லாம் இதற்காகவே தயாரித்திருக்கிறேன். ஒரு நொடியில் சந்நியாசியாய் விடலாம்.

நல்லது, இக் கோபாலர்கள் பௌர்ணமி யன்று இங்கே தான் வருவார்கள். அப்பொழுது சுபத்திரையைக் காணலாம் கிருஷ்ணனையுங் காணலாம். கண்ணனும் நமக்குத் திண்ணமாய்த் துணை செய்வான். ஹஸ்தின புரியிலெனக்கு வாக்களித்ததை மறக்கமாட்டான். தியானமாத்திரத்தில் உதவி செய்ய வருவான்.

ஏ! மாதவா! நாராயணா!

அரி! அரி! வாசுதேவா!
அச்சுதா! ஆயரேறே!
கருமுகில் வண்ணா! கண்ணா!
கமலையாள் கடவுளாரே!

விரிமறை நான்குங்காணு
　வித்தகா விரிஞ்சற்றந்த
வரிமலி துளப ! நின்பேர்
　வகுத்தலின் றியு மற் றுண்டோ ?

(திரைவிழுதல்)

## அங்கம். I

### களம் : 2

இடம் : ரேவதிகிரி. காலம்: மாலை.

[மலையைச்சுற்றி அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. யாதவர்கள் குதூகலமாய் கிரிப்ரதக்ஷணஞ் செய்கின்றனர். முன்னே பறைசாற்றி இடையர்கள் ஆடிக்கொண்டு வருகிறார்கள்.]

இடையர் (பாடுகிறார்கள்)

(அனுபந்தம் 3)

பிரவேசம் : யாதவப்ரபுக்கள், பலராமர்.

பல:—சரி, உங்கள் சங்கீத கோஷ்டி முன்னே செல்லட்டும், பெரியோர்க ளெல்லாம் நெருங்கி வந்து விட்டார்கள். அதோ நாமாவளி பாடிக் கொண்டுவரும் பாகவதர்களை யழைத்துக் கொஞ்சநேரம், அவர்களுடைய சங்கீதத்தைக்கேட்போம். வாசுகீ, அவர்களை யெல்லாம் கொஞ்சம் இப்படித் தயவுசெய்யச் சொல்லு.

[வாசுகி செல்கிறான்.]

பிரவேசம் : பாகவத கோஷ்டிகள்.

[பாடுகிறார்கள்]

நாராயணா ! நாராயணா ! நாராயணா ! நாராயணா !
நாராயணா நாராயணா ! ஜெய கோபால ஹரே !

ஒருவர் :—கோவிந்த நாம சங்கீர்த்தனம் !
எல்லாரும் :—கோவிந்தா கோவிந்தா !
ஒருவர் :—ஒளி யெல்லாம் பிறக்கு மொன்றே
ஓதிடுங் கருணைக்குன்றே !
வழியெலாமாக்கு மொன்றே
வல்வினை தீர்க்கு மொன்றே
வெளியிலு முள்ளுமொன்றே
வேகமாயளிக்கு மொன்றே
விழியெலாந் திறக்குமொன்றே
விஷ்ணுவின் நாம மொன்றே.
மற்றொருவர் : (அனுபந்தம் 4)

பலராமர் (மனதுள்) ஆ ! என்னபக்தி ! இவர்களே பாகவத ரென்ற பட்டத்திற் குரியவர். இப்படிச் சகல சாஸ்திர பாரங்கதராய், நிஷ்காம்யராய், ஜனங்களுக்குப் பக்தி புகட்டு வோரிட மன்றோ ஹரிகதை கேட்க வேண்டும். பாகவத சிகா மணிகளே ! நாங்கள் சக்தியானுசாரஞ் செய்யும் மரியாதை களைத் தயவு செய்து பெற்றுக் கொண்டு, நாங்கள் பானக பூஜை செய்யுமிடங்களுக் கெழுந்தருள வேண்டும். அங்கே விநியோகங்கள், சந்தன தாம்பூலம், எல்லாம் சித்தமாயிருக்கி ன்றன. அவற்றை நீவிரங்கீகரித்து, நாங்கள் செய்யும் தான தருமங்களைப் பெற்றுப் போகும்படி வேண்டுகிறோம்.

பாகவதர் :—நந்தா ! கோபகுமாரா ! நவநீதா ! வெகுதீரா !
நாராயண ! நாராயண ! ஜெயகோபால ஹரே !

[நிஷ்க்ர மித்தல்]

பலராமர் :—யாரோ ஒரு அற்புதமான சந்நியாசி நிஷ்டை செய்து கொண்டிருக்கிறாராம் சமீபத்தில், அவரைப் போய் தரிசிக்கலாம் வாருங்கள்.

[எல்லாரும் செல்கிறார்கள். திரைவிழுதல்]

[திரை விலகல்]

[ஒரு சந்நியாசி யோக நித்திரையி லசையாது இருக்கிறார். அவரை அநேகர் பூசித்து வணங்கு கின்றனர். கிருஷ்ணனும் கைகூப்பி நிற்கிறான்].

பலராமர்:—ஆஹா! இந்தயதியின் முகதேஜஸைப் பார்த்தீர்களா! யோக நித்திரையிலாழ்ந்திருக்கிறார். அவருடைய ஆத்மா பிரம்மத்தோடு லயமாய் விட்டதுபோல் தோன்றுகிறது. ஆவியையெல்லாம் சோமவட்டத்தி லடைத்துத்தன் ஹ்ருதயத்தினின் றெழுகும் திவ்ய அமிழ்தைப் பானஞ் செய்து கொண்டிருக்கிறார் இம்மாமுனி. இவருடைய திவ்ய தரிசனம் தேகத்திற்குரிய உபாதிகளை யெல்லாம் தீர்க்கின்றதே! அடிகளே! கருணாபயோநிதியே! என்னை யாண்டருளும், மந்த்ர குருவே! யோகதந்த்ரகுருவே!

[நமஸ்கரித்தல்]

கிருஷ்:—சரி, பின்னே ஸ்திரீகளெல்லாம் இம்மஹானைப் பார்க்க வருகிறார்களாம், நாமப்புறஞ்செல்வோம்.

[எல்லாரும் நிஷ்க்ரமித்தல்]

பிரவேசம்:—சுபத்திரை சாந்தா

(அனுபந்தம். 5)

[ரிஷிபுங்கவர் சுபத்திரையின் கானத்தைக்கேட்டுக் கண் விழிக்கிறார்]

சாந்தா:—சுபத்ரா! உன் பாக்யமே பாக்யம்! இதுகாறும் நீங்காத யோகநிஷ்டையி லிருந்தவர் உன்னையே பார்க்கிறார். உனதழகே அவரை யுன்பாலிழுத்தது போலும்! உன தினியகானமும், நீ நடக்கும்போ தூண்டாகும் கிண்

கிணிச் சத்தமுமே அவரை யோக நித்திரையி னின்றெ ழுப்பியது போலும்! ஆ! உன் சக்திக்குப் பிறகே அவரு டையது.

சுபத் :—சாந்தா, நாம் நெருங்கிவந்துவிட்டோம். ஆ! சாந்தா! என் மனம் அவரிட மீடுபட்டிருக்கிறது. பூஜா பாத்தி ரங்களை யிப்படிவை, நானவரைப் பூசிக்கிறேன்.

[சமீபத்தில் சென்று நமஸ்கரித்தல்]

ரிஷி :—நாராயண! நாராயண! மங்களானி பவந்து! என்று மருந்ததிபோல் விளங்குவாய், கன்னீ.

சுபத் :—"அருள்பழுத்த பழச்சுவையே! கரும்பே! தேனே!
ஆரமிழ்தே! என் கண்ணே! அரியவான
பொருளனைத்துந் தருபொருளே! கருணை நீங்காப்
பூரணமாய் நின்ற வொன்றே! புனித வாழ்வே!
கருதரிய கருத்தனுட் கருத்தாய் மேவிக்
காலமுந் தேசமும் வகுத்துக்கரு வியாதி
விரிவினையுங் கூட்டி யுயிர்த்தி ரளையாட்டும்
விழுப்பொருளே! யான்சொல்லும்விண்ணப்பங்கேளே!

[நமஸ்கரித்து, பாதபூஜை செய்து, கர்ப்பூரங்காட்டி]

தீதின்மை, தூய்மை, வாய்மை,சிறப்பு, நல்லொழுக்கமேன்மை,
ஈதலை மறவாத் தன்மை, ஈசனை யேத்து நீர்மை,
கோதிலாக் குணம் படைத்த கூரறி வுடையோரின் சீர்
பாதமேபணியும் பாக்யம் பரிந்தருளென தாசனே!

[நமஸ்கரித்தல்]

ரிஷி :—மங்களானிபவந்து! ஏ கன்னீ! உன் பக்தியை மனமு வந்து மெச்சினேம்! உனதுபசரணைகளை முற்று மேற்றுக்

கொண்டோம். உனக்குச் சர்வ மங்கள முண்டாகுக!
பாவையர்மணியே! நீசெய் பணிகளிலுவகையானேம்
தேவை நின்னுள்ளத்தெண்ணம் சீக்கிரத்தினிற்கைகூடும்
பூவிலோர் வீரன்றன்னைப் பொருந்தியே வரிப்பாய்
[பொன்னே.

பூவையே பாக்யமுண்டாம் புண்ணியவதியே சொன்னேம்.
நீ யொருவீர சிகாமணியை வரிக்க எண்ணி யிருக்கிறாய். நீ அவனையே யடைவாய். உனக்குக் கணவன் குரு தேசத்தினின்றே வருவான். அவனோடுநீ சகலசௌபாக்யங்களையு மனுபவித்துக்கொண்டு, என்றும் அனசூயா, அருந்ததியனைய உத்தமி களைப்போன்று நமது பரத கண்டத்திற்கொரு ரத்தினமாய் விளங்குவாய், நங்காய், சரி உத்திரவு கொடுத்தோம்.

சுபத் தந்தை மாதவத்தாலுன்றன் தளிரடிச்சேவை பெற்றேன்
எந்த நல்வினையினாலே இன்றுனால் வாழ்த்தப்பெற்றேன்
சிந்தையில் வைத்தே யுன்றன் சேவடி தொழுவேனென்
றும் சந்த சத் குணசர்வேசா! சச்சிதானந்த வாழ்வே!

[நமஸ்கரித்து நிற்கிறாள். ரிஷிபுங்கவர் யோக நித்திரையிலாழ்ந்து விடுகிறார்]

கிருஷ் :—அம்மா, சாந்தா, நீ சுபத்திரையோடு மூடுபல்லக்கில் கன்னிகா மாடஞ்செல். நான் ரிஷிபுங்கவருக்கு மற்ற ஸுஸ்ரூஷை களையுஞ் செய்து வருகிறேன். இப்பொழுதே அஸ்தமித்து விட்டது. பெண்களெல்லாம் ஊர் திரும்பலாம்.

சுபத் :—அப்படியே சென்று வருகிறேன், அண்ணா! [எல்லோரும் போகிறார்கள். கிருஷ்ணனும், ரிஷியும் தனித்திருத்தல்]

கிருஷ் :—[விநயச் சிரிப்புடன்] நிரம்பப் பெரியவர் சுவாமீ! சுவாமீ! இருடிபுங்கவரே! ரிஷிபுங்கவரே! என்ன பேச்சு மூச்சைக் காணோம்! யோகாப்யாசமோ? நிரம்ப கும்பகஞ் செய்யவேண்டாம், மோசம்! மனதைக் கொண்டு ஒரே மூச்சாய் லயித்துவிட்டீரே அவ்விடத்தில்! தியானமெல்லா மெதைப்பற்றியோ! [ரிஷி பெருமூச்சு விடுதல்] ஏது ரேசகம் என்னைப் பிடித்துத் தள்ளுகிறதே. அவ்வளவு துரிதமென்ன? ரிஷிபுங்கவரே, உலகைத் தான் மறந்தீர். பெண்ணாசையைக் கூட வெறுத்தவா போலக் காண்கின்றீர். தசப்பிரியர் நப்பிரியராய்த் தோன்றுகிறீர். நமது நேசத்தையுமா மறந்தீர்? [ரிஷி மறுமுறை பெருமூச்செறிதல்] ஐஐயோ! காரியம் மிஞ்சிப் போயிற்று! நாம் சுபத்திரைபோல் நடிப்போம்

[கிருஷ்ணன் சுபத்திரையைப்போல் பாடுதல்]

சிந்தையில் வைத்தே யுந்தன் சேவடி தொழுவே னென்றும்
சந்தசத் குணசர்வேசா சச்சிதானந்த வாழ்வே!

**அடிகளே நமஸ்காரம்!**

அருச் :—[கண்ணை மூடியே] நாராயண! நாராயண! மங்களானி பவந்து! [மனதுள்] ஆ ஹா! என்ன அழகு! என்ன பக்தி, நாற்குணமும் நல்லணியாய்க் கொண்ட ஆரணங் கேயிவள்! பக்தியில் மார்க்கண்டேயனுக்குக் குறைந் தவளல்லள். [பகிரங்கமாய்] பாவாய்! போய்வா, உனக்குச் சர்வாபீஷ்ட முண்டாகும்!

கிருஷ்: [சிரித்து] அப்பா அருச்சுனா! பெரியவரே! தவஸ்ரேஷ்டரே! நல்ல நிர்விகல்ப சமாதியிலிருந்தாய்! மனதில் விகல்பமே கிடையாது. இருதயத்தில் ஸ்திரீ வாசஞ்செய்து புத்தியைப் பிடித்திழுக்கிறாள். நீ யென்ன

செய்வாய்! அதனால்தான் நான் சொன்னது கூடக்காதில் படவில்லை இப்பொழுதாவது நிஷ்டை கலைந்ததா?

அரு: கிருஷ்ணா! வாஸ்தவமாய் சில நிமிஷங்களாக திக்பிரமை பிடித்தாற்போலானேன்.

கிருஷ்: சில நிமிஷமா! எது ஸ்திரீ மனதிலுதித்த பிறகோ?

அரு: ஆமாம் ஒரு நொடிக்கு முன் தானே சுபத்திரை இங்கு நின்று மறுபடிடும் பாடிக்கொண்டிருந்தாள். அதற்குள்ளா மறைந்து விட்டாள்?

கிருஷ்: ஓ! தியான மெல்லாமாங்கோ? அதுதான் மனம் இப்படி ஒரே லயிப்பாய் லயித்து விட்டது. அருச்சுனா! நான்தானச்சுபத்திரை, என்ன செய்யவேண்டும்?

அரு: கிருஷ்ணா! நீயே கபட நாடக சூத்ரி! என்னிடமு முன் மாயா விநோதங்களைக் காட்டி விட்டாயே. உன் வசப் படாதார் யாருளர்? உன் தங்கை நன்றாய்ப் பாடுகிறாள். சங்கீத சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறபடி ராகம், தாளம், லயம், எல்லாம் பொருந்தப் பாடுகிறாள். உன் குழலின் கானத்தைக் கேட்டு எப்படி மூவுலகும் ஸ்தம்பித்ததோ அவ்வணமே யானும் அவள் குரலைக் கேட்டுப் பரவச மானேன்.

கிரு: உன் மனமே அவள் வசமா யிருக்கிறதே அருச்சுனா! என்ன சங்கீதத்தில் என்று மில்லாத பரவசமின்று? ஓ! அது ஸ்திரீயினால் பாடப்பட்ட தனாலோ; அதிலும் நீ இச்சிக்கும் ஸ்திரீயினால் பாடப்பட்டதனாலோ? வெளியே சந்நியாசி, உள்ளே என் நண்பன், அருச்சுனன், அதற்குள்ளே.......என்ன? சுபத்திரை, இல்லையா? மனமுழுவதும் சுபத்திராத்யானம் நிரம்பி யிருக்கிறது, ஹிருதயம் பரிபூரணமா யிருக்கிறது.

அரு: கிருஷ்ணா! உன்னைப்போல் சூக்ஷ்ம புத்தியை நான் கண்டதில்லை.

கிரு: உன்னைப்போல் கபடசந்நியாசியை நான் கண்டதில்லை. சரியானவேஷம்! சரியான நடிப்பு! நான்கூட உன் நிஷ்டையைக் கண்டு பிரமித்து விட்டேன். சுபத்திரையை வாழ்த்தும் போதே நமதாசாமி யென்று தெரிந்தது.

அரு: உனக்குத் தெரியாததெது? அண்டபகி ரண்டங்களுக்குள் உன்கண் செவி. மனத்தை, ஒருபொருளும் தப்புவதில்லை இருட்டறையில் உயரக்கட்டியிருக்கும், கறுப்புப் பானையில் வைத்த வெண்ணெயை அயல்வீட்டிற்குள் இரவிற் புகுந்து, அடித்துக் கொண்டு, வீட்டிலுள்ள பெண்களையும் ஒரு கலக்குக் கலக்கிய பாலனன்றோ நீ, உனக்குத் தெரியாததா?

கிரு: எங்கே நானும் உன்னைப்போல் நடித்துப் பார்க்கிறேன். [ஆசனத்திலமர்ந்து, கண் மூடி] பக்தா தீர்க்காயுஷ்மான் பவ! நரேந்திரனுக்குக் கடவாய்! ஏ பக்தா! உனக்கென் மீதிருக்கு மன்பை மெச்சினோம். நீ செய்த குற்றங்களை மன்னித்தோம் நீ சொன்னதை அங்கீகரித்தோம் உன் மனதை அறிந்தோம். அதை நிறைவேற்றவே காஷாயம் பூண்டாயென் றுணர்ந்தோம். உன் காதலை மெச்சினோம்! உனக்கு மனோபீஷ்டமுண்டாகு மென்றாசீர் வதித்தோம். போதுமா இன்னும் வேண்டுமா!

அருச்:—கிருஷ்ணா! இதைவிட எனக்கென்ன வேண்டும்? சுபத்திரையை யடைந்தால் சுரருலகையும் வேண்டேன்.

கிருஷ்:—நமது மாப்பிள்ளை. அதிகமாய்ப் பரிகசிக்கலாகாது. சரிமாப்பிள்ளை.......

அரு: அதற்குள் பரிகசிக்கிறாயே. காரியமுழுதுங் கைகூடட்டும்.

கிரு: கைகூடினாற்போல்தான். நீ வேஷம் போட்டு நிறைவேற்றாததுண்டோ? உன் வேஷம் வீணாகாது. பிராமண வேஷத்துடன் திரௌபதையை யடைந்தாய். தபசி வேஷத்துடன், நாககன்னிகையையும், பாண்டிய கன்னிகையையும் அடைந்தாய். ஆனால் வேஷத்திற்குத் தக்க உன் நடிப்பே வியப்பு! சரியான நாடக பாத்திரம்!

அருச்: சரி, நாழிகையாய் விட்டது! மேல் நடப்பதைப் பார்ப்போம்.

கிருஷ்: ஏனவ்வளவு பதற்றம். அருச்சுனா இங்கேயே வசதியாயிருக்கலாம். ஆகாராதிகளெல்லாம் உன்னைத் தேடி வரும். நான் எனதண்ணனுடன் இன்னும் ஒருவாரத்தில் வேட்டைக்கு வருவேன். அம்மட்டும் மௌனமே சாதிக்க வேண்டும். நெருங்கி வந்தால் ஞானோபதேசத்தைப் பலமாய் நடத்தி, நிர்விகல்ப சமாதி வரையில் கொண்டு போய்விடு. நான் சென்று வருகிறேன்.

அருச்: உன் றுணையின்றி யோரணுவு மசையாது. என்றுணையாவாய் நீ வந்தலே! கிருஷ்ணாய பரப்ரம்மணே நம:

கிருஷ்: என் பூரணதயையும் துணையும் உனக்கும் உன்னைப் போன்ற பக்தர்க்கு முண்டு. சரி விடை தருதி. விஜயனுக்கெங்குஞ் ஜெயமே!

[கிருஷ்ணன் நிஷ்க்ரமித்தல்]

அருச்: சரி, விண்ணிலும், மண்ணிலும், கண்ணனின் கருத்தைத் தடுப்போரிலர். ஆதலால் நமது காரியமுற்றும் ஜயமே!

[திரைவிழுதல்]

---

## அங்கம் 1

### களம் 3.

பிரவேசம் அருச்சுனன்

இடம். குகைவாயில். காலம். முற்பகல்

அருச் :—யோகமாவது, நித்திரையாவது ! அதெல்லாம் நிஷ். கவலையுள்ள நெஞ்சத்திற்கன்றோ. நமக்கெல்லாம் தியானந்தான். என்னைப்போல் தியானத்தில் நாரதர்கூட சித்தியடைந் திருக்கமாட்டார். பிரமத்தி னொளியைக் கண்ட பெரியோர் ஆனந்தமேலிட்டு தாம்கண்டதைச் சொல்ல வாய்காணாது மௌனம் சாதித்தல் போன்று, நான் அம்மின்னலொளியைக் கண்டதுமுதல் ஒன்றுந் தோன்றாது, த தே வ த் யா ன ஞ் செ ய் து கொண்டிருக்கிறேன். அவளுடைய திருமேனிப்ரகாசத் திலேயே என்மனதின் விளக்கை யேற்றிக்கொண்டேன். அவளுடைய திவ்யப்ரகாசமே இப்பொழுதென் மனத் தில் ஜ்வலித்து அதை இதர விஷயங்களிற் செலுத்தாது ஒரே சமாதியில் நிறுத்தியது. ஆகாரம் நித்திரை முற் றும் வெறுத்தேன். அவளுடைய தியானத்தின் பானத் தினாலேயே எனதுயிரை நிலைநிறுத்துகிறேன். இத் துணை நாள்வந்தவர் கட்கெல்லாம் மௌனவிடை சொல் லியனுப்பிவிட்டேன். மௌனவிரதமும் பலித்தது.

ஆ ! இத்தடாகத்திலுள்ள ஒவ்வொரு குவளையுட் அவளுடைய கண்களைப்போ லிருக்கிறதே. அக்குவளைப் புஷ்பங் களென்னைப் பார்க்கும்போது யானெப்படி அவைகளைப் பாரா திருக்க முடியும் ? எப்படிஎன் கண்களை அன்னியர்பால் செலுத்த முடியும் ? என்ன, காலடிகள் கேட்கின்றனவே.

கிருஷ்ண னின்றுதானே வருவதாகச் சொன்னான். இன்னு மேன்காணோம். ஏ கிருஷ்ணா! கேசவா!

[திடீரென் றுட்கார்ந்து நிஷ்டை செய்தல்]

பிரவேசம் பலராமர், வாசுகி, சுநந்தன்.

பலரா:—ஆ! சுநந்தா! நமக்கின்று காணரிய தரிசனங் கிடைத்தது. [நமஸ்கரித்து] சத்குருவே சரணாகதி! பரிபூரணானந்தமே! சுநந்தா இவர்தானே நமது சுபத்திரையை யன்று ஆசீர்வதித்தது. இவர் நல்ல மஹாத்மாவாகவே காண்கிறார். ஆகாரம், நித்திரை, இந்திரிய மிம் மூன்றையும் நிக்ரகித்தவர். சதா நிஷ்டையிலேயே யிருக்கிறார்.

சுநந்:—ஆ! ஆகாரமில்லா திருந்தும் தேககாந்தி முன்னினு மதிகமாகவே யிருக்கிறது. ஹ்ருதயம் ப்ரம்ம மயமாயிருப்போர்க்கு வேண்டுவதேது? அவர் பிரம்மானந்த நிஷ்டர். இப்பரிபக்குவ நிலையை யடையத்தானே நாரதாதி ரிஷிகளும் நாராயணத்யானத்தை இன்னுஞ் செய்கிறார்கள். தரிசன மாத்திரத்தில் சகலமும் சித்திசெய்யும் மஹாநுபவர். இன்னுமிவரைப்பற்றி வெகு பெருமையாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

வாசுகி:—சாமீ; எங்கப்பனப்ப! தெண்டம்! நீயேரச்சி! ஆறுமாதத்திற்கு முன்னே என்மைலக்காளையை எந்தப் பயலோ பத்திக்கிட்டுப் போய்விட்டான்.

[அருச்சுனன் கண் விழித்தல்]

பலரா:—அடவாசுகி! உனக்கு மஹத்தான பாபம் வந்தது. அவருடைய நிஷ்டையைக் கலைத்துவிட்டாயே உன் தொண்டையால். உன் வாயை மூடு.

வாசுகி :—என் ராமமூர்த்தி! மன்னிக்கணும்! மன்னிக்கணும்!

பலரா :—வாசுகீ பேசாது நில். [வாசுகி அப்புறம் செல்லல்]

அரு :—[நிஷ்டை கலைந்து] ப்ரக்ஞானம் ப்ரம்மம்.

"நபூமிர் நதோயம் நதேஜோநவாயு!
நமந்நேந்த்ரியம்வா நதேஷாம் ஸமூஹ!
அநேகாந்தி கத்வாத் சுஷுப்த்யேவ சித்திஸ்
ததேகோ வசிஷ்டஸ் சிவக்கேவ லோகம்."

பலரா :—அமனைத்து மறவிடுத்து மரணிடத்தி லாழ்ந்தமன தடைந்த வாழ்வே!
சுகமனைத்தும் பெற்றரிய துரியநிலை கடந்தொளிருஞ் சோதிமூர்த்தீ!
சகமனைத்து முனக்கிணையோ சகலகலை மறையுணர்ந்த சத்ய மூர்த்தீ!
இகபரநற் சுகமகிழ் வினீந்தெனைக் காத்தருள்புரியுமிறைவா எந்தாய்!

அருச் :—பக்தர்காள்! உங்கள் வரவு நல்வரவாகுக! தீர்காயுஷ்மான் பவதி. பக்தர்காள்! வீற்றிருங்கள்.

பலரா :—சுவாமீ! இங்கே யெல்லாம் பிரம்மமயமாய் விளங்கிக் கொண்டிருக்கிறது. தங்களிடமிருந் துபதேசம் பெறவே நானிங்கு வந்தேன்.

அருச் :— நான் வந்தேன், நான் என்பது யார்?

பலரா :—என்னைப் பலராம ரென்பார்கள்.

அருச் :—இல்லை பக்தா! நீசொல்வதநித்யம். நான் என்பது ஆத்மா.

பலரா :—சரி உணர்ந்தேன். என் ஆத்மா தங்களையே குருவாக நாடியிருக்கிறது.

அருச் :—இல்லை பக்தா. குரு தெய்வங்களை நினைப்பது மன தன்றோ "நசிஷ்யா நசிக்ஷா" என்றபடியே நமக்கு, மனது பற்பல நினைவுகளைக் கொண்டது. அதனால்தான் ஏகமூர்த்தியாகிய வஸ்துவைப் பற்பல நாமதேயங்களா லழைக்கிறார்கள். நாம ரூப பேதங்களாற் பக்குவநிலை மாறுவதில்லை. ராமா வென்றாலும், கிருஷ்ணா வென்றாலும், ராமகிருஷ்ணா வென்றாலும் மூர்த்தியொன்றே. அம்மூர்த்தியையே நாம் நாராயணா வென்றோம். இப் பயம் நிறைந்த உலகோர்க் கபயமளிப் பவரவரே. சர்வம்நாராயணாயேதி சமர்ப்பயாமி யென்றெல்லாவற்றை யும் நீத்தார்க்கே நற்கதியுண்டு. நாராயண ! நாராயண !

பிரவேசம் கிருஷ்ணன்.

கிருஷ் :—அடே வாசுகீ ! வேட்டைப் பொருள்களை யெல்லாம் எடுத்து வீடுசெல். நான் சற்று தாமதித்து வருகிறேன்.

[வாசுகி செல்கிறான்] [கிருஷ்ணன் நமஸ்கரித்தல்]

ஹர ! ஹர ! ஹர ! சுவாமிகளே ! நமஸ்தே நமஸ்தே நமஸ்தே நம.

அரு :—கல்யாண் ! கல்யாண் ! கல்யாண் ! பக்தா, வீற்றிருப் பாய் ! கேளீர் பக்தர்காள் ! "பாரோர்பயமயமே, பாரோ ரிருள்மயமே ! பாரோரனித்ய மயமே ! என்றார்கள். போகத்தில் ரோகத்தின் பயம். நல்லகுடிக்கு துஷ்ட ஸ்திரீ அல்லது துஷ்ட புத்திரனால் பயம். சாதுக்களுக் குத் துர்ஜனரின் பயம். மானிக்கு அவமானத்தின் பயம். பலவானுக்குப் பலவானின் பயம். ரூபவதிக்கு விருத் தாப்யம் வந்து, நம்மை ஒருவரும் விரும்பத் தகாதபடி செய்துவிடுமே யென்றபயம். நான்குவேதம், ஆறுசாஸ் திரம், 64 கலைகள் கற்றோர்க்கும் தர்க்க சாஸ்திரியின்

பயம். இக்காயத்திற்கே ஒவ்வொரு நிமிஷமும் மிருத்யு பயமிருக்கிறது. இதையொட்டி யன்றோ ஆன்றோர்,

என்றுமழியு மிக்காயம்— இத்தை
ஏதுக்கு மெய்யென்றிருந்தீ ருலகீர்
ஒன்று மறியாத நீரே—யம
னேலே வந்தால் சொல்ல உத்தரமுண்டோ?
சங்கர—சங்கர—சம்போ!

என்று முறையிடுகின்றனர். பிறப்பிற்கு மிறப்பிற்கு மோடி யலேயு மிச்சரீரம் பந்தங்களைப் பெருக்குகிறது. வைராக்யமா யிருப்போமென்றால் பார்யை குறுக்கிடுகிறாள். குடும்பிக ளென்ன செய்வார்கள்?

பலரா:—ஆஹா! கிருஷ்ணா! எவ்வள வனுபோகித்துச் சொல்லுகிறார்.

அருச்:—ஆத்மநிலேயே மெய்ந்நிலே. அந்நிலையை யடைவதே மோக்ஷம். நாராயணனே குறைகளைந்து நம்மைத்துறை சேர்ப்போன்.

பலரா:—ஆத்ம நிலையை யடைவ தெப்படி?

அருச்:—குரு சாஸ்திர மூலம் ஞானம் பெற்று பிறகு அனு போகத்தால் அபரோக்ஷ சித்தியடையவேண்டும். குரு, பரிபக்குவ நிலேயில் தானே வருவார். ஓம் தத்ஸத்! ஏ சத்குரோ!

அக்ஞான இருளைப்போக்கிசுக்ஞானத்தைப்புகட்டுபவரே

குரு:—"யத்பாவம் தத்பவதி" நாமெவ்வித மெண்ணி, நம்பி உபாசிக்கிறோமோ அவ்விதமே வந்து காட்சியளிப்பார். நாராயண! நாராயண! சத்குரோபாஹி! பக்தர்காள்! பூவை, பூ, பொருள், அழகு, பேர், பெருமை யிவையெ லாம் புன்மை மாயா ரகிதமாம்

தேவைகளளித்தருள் திருத்துழாய் மார்பனிரு சேவடி
களே சதமதாம்
யாவையும வன்பொருள்க ளவனையல்லாது வாழ்வடை
வதற்கேது முளதோ ?
நாவினுக்கவனும மல்லாது மேன்மையுடன் நன்மைதரு
நாமமிலையே !

பலரா:—அவனருள் பெற்றூர் அனைத்துமடைந்தவரே. அத
னினு மோங்கியதுளதோ ?

அருச்:—அவனே, யருந்துணை யாயவ னியைத்து றந்திடில்
ஆதரித்தாட் கொளானோ ?
அவனே படைப்பவன் அவனே யளிப்பவன்
அவனே யழிப்ப னுலகை
அவனே யெவற்றிலும் யாவு மற்றவனிலே
அகம்புற மிரண்டிலுள்ளோன்
அவனைநினைந்தருட் கண்ணீர் பெருக்குவோ
ரடைவர் பேரின் பநிலையே

பலரா:—சர்வம் நாராயணமயம் ஜகத்தாகத்தானே யிருக்கிறது

அருச்:—பக்தர்காள் நாராயணவென்ற நாமமே நிச்சயம் நாடி
யும் மனதுள் வைப்பீர் !

ஓம்தத் ஸத் !

பலரா:—"ஆதியந்தமில்லா வரிய பரஞ் சோதி !
நீதிமொழி கண்டதுவாய் நிற்குநா ளெந்நாளோ ?
புண்ணியபாவங்கள்பொருந்தாமெய்யன் பரெலாம்
நண்ணியபேரின் பசுகம் நானடைவ தெந்நாளோ?"

[நமஸ்கரித்தல்]

அருச்:—பக்தா ! உன் சிரத்தையை மெச்சினேன். நீ சீக்கிரம்
சமநிலையை யடைவாய்.

பலரா.—எல்லா மவ்விடத் தனுக்ரகந்தான். சுவாமீ தாள்பணிந்து கேட்கிறேன், தாங்கள் தங்குமிடமெது ?

அருச்:—பக்தா! சர்வாண்டமும் நம் வீடுதான்
"பூவணையாகி வானம் பொருந்துமேற் கட்டியாகித்
தீவமதாகி யிந்து செங்கதிர் வீசுங் காற்று
மேவுசாமரமதாகி விடுதலை மணிவியாகிக்
கேவல மின்பமாகிக் கிளர்ச்சியாய் நின்றான்வேந்தன் என்றபடி, சர்வத்யாகஞ் செய்து, மண், பொன், முதலியவற்றை வெறுத்த துறவிகளுக்கு, ஸ்திரமான வீடேது ? அப்பந்தங்களிலெல்லாம் நாம் கட்டுண்டவர்க ளல்லேம். ஆகாராதிகளாலுமல்லேம். கிடைத்தாலுண்போம். அல்லேல் இல்லை. இவையெல்லாம் ஆத்மாவை மாறுபடுத்துவதில்லை. நிர்மலமான ஜீவநதி போன்று என்றும் பிரம்மானந்த சுயேச்சையையடைந்த நமக்குப் பந்தத்தில் தானிச்சைபோகுமா ?

கிருஷ்:—போகவே போகாது, போகமோ பொல்லாது. காயமோ நில்லாது. அதனுபாதிகளுந் தங்களிடஞ் செல்லாது.

பலரா:—சுவாமீ எங்க ளரண்மனைக்குத் தாங்கள் தயவுசெய்தெழுந்தருளவேண்டும். அதோ தெரியும் பூந்தோட்டத்திலேயே தாங்களாஸ் ரமத்தை யமைத்துக் கொள்ளலாம்.

அருச்: ஒன்று; நாம் கிரகஸ்தர் செய்யும் பணிவிடைகளை யேற்றுக் கொள்ளோம். கன்னிகைகளே சுத்தவதிகள். அவர்களே நமது பணிக்கு ரியவர்கள்.

பலரா: தங்கள் மனோபீஷ்டத்தைச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன். கிருஷ்ணா !

கிருஷ்: அண்ணு ! நான் சந்நிதானத்தில் காத்துக் கொண்டே யிருக்கிறேனே.

பலரா: சுவாமிகளைத் தெரியுமோ உனக்கு ?

கிருஷ்: அடேயப்பா ! உங்களுக்குப் புதுச்சாமியார், எனக்குப் பழைய பழைபசாமி யன்றோ. அநேக காரியங்களை யனுகூலித்திருக்கிறார். தியானத்தில் பூராசித்தி, வேதப் பழம், வியாகரணத்தில் பாணினி அவதாரம். ஒழுக்கத் தையு யிரினுமோம்புபவர். நிஷ்டையிலிருந்தால் ஜடந் தானிங் கிருக்கும். ஆத்மாபூர அங்கேலயித்துவிடும். மஹானுபாவனன்றோ ? இன்றவ ரிவ்வளவு பேசியது தங்கள் பூஜாபலமே. பக்குவ மடைந்தோர்க்கே அவர் எல்லாம் சொல்லுவார்.

பலரா: கிருஷ்ணு ! உனக்கி வரைப்பற்றி யனைத்துந் தெரிந் திருப்பதால் நீயே யவரைப் பற்றி சிரத்தை யெடுத்துக் கொள். நமது சுபத்திரையின் கன்னிகாமாடத்திலுள்ள பன்ன சாலையிலேயே இவருக் காஸ்ரமம மைத்து, அவளைக் கொண்டே பணிவிடைகள் செய்யச் சொல்லி யேற்பாடு செய். குந்தி தேவி பெரியோர் கைங் கரியத் தினு லடைந்த பலனை யிவளு மடையட்டுமே. உனக் கெப்படித் தோன்றுகிறது ?

கிருஷ்: அண்ணு தங்களைத் தட்டியுரைப்பதாக எண்ணக் கூடாது. தாங்கள் பெரியவர், எல்லாந் தெரிந்தவர். பார்க் கையில் பரம சாதுவாகவே யிருக்கிறார். நிர்விஷயராகவே காண்கிறார், பேசுகிறார். உள் எப்படியோ யானறியேன் பிறகு ஏதாவது அசம்பாவிதமாய் நேர்ந்தால் நான் உத் தர வாதமல்ல.

பலரா: கிருஷ்ணா! என்ன அபராதத்தைச் செய்தாய்! அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேள். அவரோ கல்மிஷ மில்லாத்துறவி. அவரால் நன்மையே யாகும்.

கிருஷ்: அப்படி, பெரியவ ராகிய தாங்கள் தைரியஞ் சொன்னால்சரி. எல்லாம் நன்மை யாகவே முடியும்.

பலரா: நான் போய் வருகிறேன். நீசம யோசிதப்படி நடந்து அவருக்குத் திருப்தி செய்வி. சுவாமீ விடைதருதிர்.

அருச்: [தலையை யசைத்துக் கொண்டே] நாராயண! நாராயண!

(பலராமர் நிஷ்க் ரமித்தல்)

[அருச்சுனன் யோகநி த்திரையி லிருத்தல்]

கிருஷ்: அப்பா! எல்லாம் நீத்தவனே! என்ன, தியானமா? இன்று மத்யானத்தோடு தியானத்தைப் பூர்த்தி செய். இன்னு மொரு மாதத்தில் தியானபலன் கைகூடும்.

அருச்: கிருஷ்ணா கூட்டு வான் நீயே! எல்லாமுன் செயலே

கிருஷ்: அருச்சுனா! பலே! சரியான நடிப்பு! எவ்வளவோ! சாஸ்திரத்தில் வல்ல, எனதண்ணாவையே சித்திரப் பாவை போலாக்கி வாயெடுக்க வொட்டாதடித்தாயே! நான் கூடப்ரமித்துக் கனவோ, நனவோ, என்றிருந்தேன்.

அருச்: சீக்கிரத்தில் புறப்படு. காரியத்தைக் கருதுவோம். இனி கர்மமே கண்ணாயிருக்க வேண்டும்.

கிருஷ்: காரியத்தி லென்ன என்று மில்லாத சிரத்தை இன்றேற்பட்டது. ஓ! அது சுவய காரிய மானதனாலேயோ? காரிய மெல்லாம் ஜெயமே!

அருச்: எல் லாமுன் செயலெனவே எண்ணி நீத்தேன்!
எல்லா நீவல்லே யெனக் கேனோவையம்!
எல்லாரு மடிவணங்கு மேக மூர்த்தி!
எல்லா முன் திருவடிக்கே ஈந்தேன் தேவே!

கிருஷ்: அன்பா, போவோம் வா.

(நிஷ்க்ரமித்தல்)

---

## அங்கம் II.

### களம் (1)

இடம் உருக்குமணியினந்தப்புரம் காலம்: மாலே.

பிரவேசம்: உருக்குமணி.

உருக்மணி: நாள் நான்காகிறதே, இன்னுமென் நாதனைக்காணோமே, "இதோ வருகிறேனென்று எங்கு சென்றாரோ தெரியவில்லேயே. ஒருவேளை சத்தியபாமையி னரண்மனையி லுபசாரங்கள் பலமாய் நடக்கின்றனவோ? இல்லேயே, இங்குவரா தங்கேகாரே. சர்வாந்தர்யாமியாய், சர்வசரீரியாயிருக்கும் மனோகரா! ராசக்ரீடைசெய்து ஒவ்வொரு கோபியர்க்கும் ஒவ்வொரு நாதனைத் தோன்றிக் காத்தது போல் என்னேயு மிப்பொழுது ரக்ஷிக்கலாகாதா? அல்லது ரக்ஷிக்கத்தகுந்த பாத்திரமல்லனோ? ஏ நாதா! என்னசெய்வேன்? எங்குதேடுவேன்?

(அனுபந்தம் 6)

பிரவேசம்: கிருஷ்ணன்.

கிருஷ்:—கண்ணே! உனக்குக் காற்று எவ்வளவு சமீபமாயிருக்கிறதோ அதனினும் நெருங்கியிருந்தேனே, இருக்கிறேனே, இருப்பேனே.

உருக் :—பிராணேசா ! எப்பொழுது எப்படி வந்தீர் ? எங்கேயிருந்தோ குதித்தாற்போல் வந்து, என்னிடங் கிருபைவைத்து, எனக்கிந்த பிரம்மானந்தத்தை யளிக்கிறீரே, இது என் பக்திக்குக் கைம்மாறு ? தங்களைக் காணுதென் அகக்கண்களும், புறக்கண்களும், வாட எங்கே சென்றிருந்தீர் இந்நான்கு நாட்களாக, நான்கு யுகங்களாக—

கிருஷ் :—அப்பா ! இந்நான்கு நாளுக்குத்தானு இந்தப் பாடு படுகிறாய் அதற்குத்தானு யுகமென்றாய்.

உருக் :—யுகமென்றுஞ் சொல்லலாம் அதற்கு மேலும் சொல்லலாம். நாதா தங்களைப் பிரிந்த ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு யுகமாகவே யிருக்கிறது. ஆதலால் என்னைவிட்டுப் பிரியாத வரத்தையே தங்களிடம் கோரினேன். போன விடத்தில் இவ்வளவு தாமதமேன் ?

கிருஷ் :—நான் உனக்காகத்தான் விரைந்துவந்தேன். ஒரு முனிவரைக் கானகத்திற் கண்டேன். அவர் மிகவும் பெரியவர், திரிகரண சுத்தர். நினைத்ததை யனுகூலிக்கும் நின்மலர். அவரைப் பிரிய மனமின்றி என்னேடு கூடவே யழைத்துவந்தேன். அவருக்குச் சுபத்திரையினரண்மனையிலுள்ள பன்னசாலையிலேயே அண்ணு ஆஸ்ரமமமைத்திருக்கிறுர். சரி மற்றதையெல்லாம் பிறகு பேசிக்கொள்வோம். அவரை யழைத்து வருகிறேன், அதிதிகளைக் காக்கவைக்கலாகாது. நசிகேதனைத்தன்வாயிலிற் பட்டினியுடன் காக்கவைத்த இயமன் எத்துணை வருந்தினுன். ஆதலின் நான் சீக்கிரம் பாதசுத்தி செய்தவரை யழைத்துவருகிறேன். நீ ஆசனம், அர்க்யம், பாத்யம், சமர்ப்பிர்க்கச் சித்தமாயிரு. போஜனத்திற்கு மிலை போட்டிருக்கட்டும்.

உருக்: இருக்கட்டும், யதிகளாயிற்றே, சத்வபதார்த் தங்களைக் கொண்டு துண்டாய் வேண்டுமென்றாலும் சமையல் செய்கிறேனே. அவர் என்ன சொல்லுகிறார்?

கிருஷ்: அவர் சொல்லுவதென்ன? எல்லாம் நம்ம ரிஷிதான் அவர் அதிவர்ணாஸ்ரமி. எவ்வீட்டிலும் எவ்வுண்டியை யும் உண்பார்.

உருக்: ஆனால் சீக்கிரமழைத்து வாருங்கள். நான் எல்லா வற்றையுந் தயார்செய்கிறேன்.

(கிருஷ்ணன் நிஷ்க்ரமித்தல்)

ஸ்ரீதரருக்கு மனைவியாகி எத்தனை ஜீவன் முக்தரின் தரிசனம் கிடைத்திருக்கிறது. ஸ்மரணை மாத்தி ரத்தில் எனக்கு வந்த பிணிகளை ஹரணஞ் செய்து என்னைப் பாணிக்ரகணஞ் செய்த பக்தவத்ஸலனன்றோ என் நாதன்.

பிரவேசம்: கிருஷ்ணன்: ரிஷிபுங்கவர்.

கிருஷ்: சுவாமீ! இதுதான் வழி! இப்படி வாருங்கள். இவ் வாசனமீ தமருங்கள். (ரிஷி அமர்தல் கிருஷ்ணன் விசிறி போடல்) உருக்குமணி! அவரை நமஸ் கரி [உருக்குமணி நமஸ்கரித்தல்.]

ரிஷி: தீர்க்க சுமங்கலீபவ! மங்களானிப வந்து! கண்ணனு டன் பிரியாக்காதலி யாயிருப்பாய், பக்தையே! மங்க ளானிப வந்து! நாராயண! நாராயண! [ரிஷி தியானத் திலாழ்ந்து விடுகிறார்.]

உருக்: சுவாமிகளே, இங்கேயே பிக்ஷைவைத்துக் கொள்ள லாம்.

கிருஷ்: அதற்குள்ளே பாயாதே. இப்பொழுது தான் சமாதி கூடியிருக்கிறது. நிஷ்டைகலே யட்டும். சுவாமீ! இன்று தியானம் சுருக்கமாகவே யிருக்கட்டும். எங்கே யாகிலும் லயித்து விட்டால் சுயப்ரக்ஞை வருவது பிரம்மப்ரயத்தனமாயிருக்கிறது. பன்ன சாலைக்குப் போய், சலியாது ஜபத்தை உருவேத்தலாம்.

ரிஷி (சிரித்தல்.)

உருக்: (ஆத்ம கதமாய்) இவருடைய முகவாட்டத்தையும், கம்பீரத்தையும் நோக்குங்கால் க்ஷத்திரிய ரென்றேதோன்றுகிறது. இவருடைய பல்லொளியைப் போல்......சின்னங்களெல்லாம் சரியாயிருக்கின்றனவே. (பகிரங்கமாய்) சுவாமீ எங்களகத்திற்குத் தாங்கள் பெரியமனது செய்தது பாக்கியமே. தமதகம் எத்தேசத்தில்?

ரிஷி: உத்தமீ, சந்நியாசிகளுக்கு அகமேது, ஜகமேது? அகமெல்லாம் போனவிடந் தெரியவில்லை. மனது "தும்" "தும்" "எல்லாம் நீயே" என்ற வீணையை மீட்டும் போது நான் என்பதில் புத்திபோகுமா?.

உருக்: நன்ருய்ச் சொல்லுகிருர், நாதா.

கிருஷ்: அடி பயித்தியமே. தாறுமாருய்க் கேள்விகேட்டு அகப்பட்டுக் கொள்ளுகிருயே. பிறகு உபந்யாசத்திற் காரம்பித்து விட்டால் நாள் நான் காயினும் ஓயமாட்டார். பிறகு சாப்பாடு மண்ணுதான். பேசாதிரு. எல்லாம் என்னைக் கேள்.

ரிஷி: பாக்யவதீ! கண்ணனுக்குத் தெரியாததெது? கருப்பைக்குள்ளிருக்கும் சிசுவின் மனத்தை யறிந்தவர் யார் மனத்தையே யறியார்? அவருடைய நாமாவளியே எங்கள் ஒளி.

கிருஷ்: இப்பொழுது இம்மஹரிஷியின் திவ்விய சரித்திரத்தை என் சிற்றறிவிற் கெட்டியவரையிற் கூறுகிறேன். இவரிருப்பது இந்த்ரப்ரத்தம், குருதேசம். வைராக்யத்தால் தீர்த்தாடனத்திற்குப் புறப்பட்டார். மிகவும் ஒரு மனப்பட்டவர். நமது சுபத்திரையின் கன்னிகாமாடத்திலிருந்து அவளாலேயே பூஜிக்கப்பட்டுமே.

உருக் :—(மனதுள்) சரி சந்தேக நிவர்த்தியாயிற்று. அவ்ரா கத்தா னிருக்கவேண்டும், நிச்சயம். (வெளியாய்) சுவாமீ! தாங்கள் வந்த இடம் பொருள் ஏவலை நோக்குங்கால், என் நாதன் தங்களிட மிருக்கும் நேசத்தைப் பார்க்குங்கால் தங்களுடைய பல்லொளியைக் காணும் போது, பார்த்தன் போலன்றோ காண்கிறது.

கிருஷ் :—பார்த்தன்தானடி பார்த்தன்தான்! தோன்றுகிறதென்ன?

உருக்:—ஆ! பார்த்தனோ! வாரும்! வாரும்! அப்பொழுதே பல்லொளியா லறிந்தேன்.

அருச்:— நீ யறியாதிருப்பாயா! சரியான ஆசாமியைச் சார்ந்திருக்கிறாயன்றோ.

உருக் :—ஊரி லெல்லோரும் க்ஷேமந்தானே.

அருச் :—[மௌனமாயிருத்தல்]

உருக் :—திரௌபதை சௌக்யந்தானே. ஊரைவிட்டு வந்து எத்தனை நாளாயிற்று?

அருச்:—(மௌனம்)

கிருஷ்:—என்ன சுவாமிகளுக்கு நிஷ்டையோ அல்லது பசிக்களைப்போ?

அருச்:—எல்லாரும் உன் கிருபையால் க்ஷேமமே.

உருக்:—இன்று இங்கேயே போஜனஞ்செய்து, வீட்டைவிட்டு வெளியேறும் போது சந்நியாசி யாகலாம். கிரகத்திலிருக்கும் வரையில், பார்த்தனாகவே, கிரஹஸ்தனைப் போல், சுத்தவீரனைப்போலிரும்.

அருச்:—(மௌனம்)

கிருஷ்:—அருச்சுனா! குட்டுவெளி யாயிற்றென் றெண்ணுகிறாயா? எல்லாம் நமக்குள்தானே.

உருக்:—சாமியார் வேஷம் போட்டால் உம்மை ஒருவராலும் கண்டுபிடிக்க முடியாது.

கிருஷ்:—ஒரு தீர்க்க சுமங்கலீபவா சொன்னால் ஊரெல்லாம் கிடுகிடுத்துப் போகுமே. சரி போஜனஞ் செய்துவிட்டுப் பூஜாக்ரகஞ் செல்வோம்.

உருக்:—சரியான பூஜை! சரியான பூஜாக்ரகம்! சரியான சாமியார், ரிஷீஸ்வரர்! சரியான சிஷ்யை; சுபத்திரைக்கும் ஈடான அதிதி சத்பாத்திரம்! நன்கமைந்தது!

கிருஷ்:—அதிதியோடு நின்றுவிட்டதா?

உருக்:—இல்லை, சரியான கணவன்.

கிருஷ்:—ஸ், பேசாதே! அபசாரம் வரும். அதிதிகளே வாரும் போஜனாந்தரம் ஆஸ்ரமஞ் செல்லலாம். இப்பொழுது போஜனாலயஞ் செல்வோம்.

[நிஷ்கரமித்தல்]

## அங்கம் II.

### களம்: 2.

இடம்: சுபத்திரையினந்தப்புரம்] காலம்: மாலை

[சுபத்திரையும் சாந்தாவும் பாடிக் கொண்டிருக்கிறார்கள்].

(அனுபந்தம் 7.)

சாந் :—சுபத்திரா! உன் பாட்டு மனதை உருக்குகிறது. உன்னினிய சங்கீதமே என்னை உன்பால் விட்டகலாது, உன்வச மாக்கியது. உன் தொண்டைக்கும் வீணைக்கும் வித்தியாச மில்லை. வீணையுடன் கோட்டு வாத்தியமும் சேர்ந்தாற்போலிருக்கிறது. அன்று அந்த ரிஷி புங்கவர், உன் சத்குருவின் மேல் பாடிய பாட்டைக் கொஞ்சம் வீணையில் மீட்டு.

சுபத் :—சாந்தா பெரியோரை யெல்லாம் இப்படி நமது ஸ்தானத்தில் வைத்துப் பேசாதே. அவர் என்குரு வென்னடி? உன் குரு வில்லையா? அவர் ஜகத்குரு. அவருடைய முகார விந்தத்தைப் பார்த்த நாள் முதல்...

சாந்தா :—பார்த்த நாள் முதல்.......உன் மனம் அதிலேயே லயித்துப் போயிற்று. சொப்பனத்திலும் சத்குருவே, ஜாக்கிரத்திலும் சத்குரு வேயாக சர்வமும் சத்குரு மயமாகவே தோன்று கிறதுனக்கு. அவர் உனக்கன்று கொடுத்த ஆசீர் வாதத்திற்காக அவ்வளவு பக்தியிருக்க வேண்டியது தான். ஆ! மறந்து போனேன், எத்தேசத் திலிருந்து?

சுபத் :—ஆம், குருதேச மென்றால் யாரென்றறிந் தாய்?

சாந்தா :—ஆ! அதுவும் குரு தேசமாகவா வரவேண்டும். ஒரு வேளை தன் தேசத்தைத்தான் சொன்னாரோ? அவரிருப்பதெங்கு?

சுபத் :—அந்தவம் பெலாம் நமக் கெதற்கு? மஹானுக் கெல்லாந் தன் தேசமே; ஒன்றுந் தன்னுடையதல்ல. நீத்தோர்க்கு, நீளுலகம், நவநிதியம், எல்லாம் சேவகரன்றோ நன்மங்கையரைத்தாய் போற்கருதுந் தகைமையாரவர். சாந்தா அவரின்னு மிவ்வூரிலே தானிருக்கிறு ராம். அவரைப் போய்த் தரிசிக்கலாமா? உனக்கும் ஏதாவது சொல்லு வார்.

சாந்தா :—ஏதோ பார்க்கலாம். சரி, நீ சற்றுபாடு. வெள்ளிக் கிழமை யன்று மீனாக்ஷி சந்நிதியில் பாடினயே, சாவேரியில், அது மிகவும் இனிமை யாயிருந்தது. இப்பொழுது அதைப்பாடினல் நீ நினைத்தவரையே, அருச்சுனரையே யடைவாய்.

சுபத் (பாடுதல்.)

(அனுபந்தம் 8.)

பிரவேசம் : கிருஷ்ணன் : ரிஷிபுங்கவர் :

ரிஷி :—கிருஷ்ணு ! இதோதன் யாழனைய குரலுடன் சாஸ்திரோக்தமாய்ப் பாடுகிறுளே. ஆ! என்ன ஞானம்! கூடயாரிருப்பது?

கிருஷ் :—இந்த உளவெல்லாம் உனக் கெதற்கு? கன்னியைத் தனியாய் வைப்பார்களோ? உள்ளே போவோம் வா.

ரிஷி :—நாராயண ! நாராயண !

சுபத் :—சாந்தா! காணப் போன தெய்வம் கண்ணெதிரே வந்தாற்போல் என் அண்ணா யதீஸ்வரரோடு இங்குவருவது என் பாக்கியமே. எனக்குத் தரிசனங் கொடுக்கவே எழுந்தருளியிருக்கிறார் போலும்.

சாந்தா:—மீனாக்ஷி வரப்ரசாதி யன்றோ? நீ கோரியதை உடனே கொடுத்து விட்டாள். அன்று குருதேச மென்றார், வீரனென்றார். இன்று மற்றதையும் பூர்த்தி செய்யவே வந்திருக்கிறார்.

சுபத் :—பேசாதே, வந்து விட்டார். நான் போய் பாத பூஜை செய்கிறேன். நீ ஒரு தட்டில் பழம் கொண்டு வந்து சமர்ப்பி.

சாந்தா :—ஆகட்டும்.. ...எப்படியா வதுனக்கு........

சுபத் :—அண்ணா நமஸ்காரம்.

கிருஷ் :—என்னை யப்புறம் நமஸ் கரிக்கலாம். அந்த யதிகளுக்கு மரியாதை செய். உனதிஷ்டபூர்த்தி செய்வார். உன் நிமித்தமே யவரையிங் கழைத்து வந்தேன்.

சுபத் :—அவரையே இங்கு வரப்பெற்றது எனது பாக்யமே. அவருடைய திருச்சந்நிதானத்திற்கு வர இப்பொழுது தான் சாந்தா வோடு பேசிக்கொண்டிருந்தேன்.

[சுபத்திரை பாதபூஜை செய்கிறாள். ரிஷி புங்கவருக்குக்கால் கூசுகிறது.]

கிருஷ்:—போதும்! போதும்! யதீஸ்வரருக்குச் சந்துஷ்டியாய் விட்டது.

[சுபத்திரை நமஸ்கரித்தல்.]

ரிஷி:—மங்களானி பவந்து! நாராயண! நாராயண! பெரியோராசீர் வாதத்தால் ஒரு சுத்த வீரனையே யடைவாய்! நாராயண! நாராயண!

4003

[நிஷ்டையிலிருத்தல்]

கிருஷ்:—சரி, இனி யிப்புறம் வந்து விடுங்கள். அடிகளுக்குச் சமாதி வந்து விட்டது. சுபத்திரா! அசை யாப் பொருளாய் விட்டார் பார்! ஜடந்தானிங் கேயிருக்கிறது. தியான மெல்லாம் எதை க்குறித்தோ. இம்மஹானின் நிஷ்களங் கமான ஹ்ருதயத்தை யார் சோதிக்க முடியும்? சுபத்ரா உன் பாக்யமே பாக்யம்! உன்னையே தொண்டு செய்வதற்குத் தகுதியெனப் பொறுக்கி யெடுத்திருக்கிறார். உன்னை யோசிக்கும் விஷயத்தில் நாங்களெல்லாம் பாவிகளே.

சுபத்ரா—நீங்களும், மதினியும், அவருக்கேன் தொண்டு செய்யலாகாது. உங்களுக்குப் பேரியோரிட மவ்வளவு தீவிர பக்தி.

கிருஷ்:—விஷயந் தெரிய வில்லையே யுனக்கு. இம்மஹான் மஹா சுத்தர். உள்ளும் புறமும் ஒரே நிர்மலவடிவு. ஆகையால் பிரம்மச் சாரிகளைவிட சுத்த கன்னி கைகளே தன் பணிவிடைக்குத் தகுந்தவரென்கிறார். கிரகஸ்தர் பேச்சை யெடுத்தாற் கூடச் சகியார். அதனாற்றான் நான் கூடக்கிட்ட நெருங்காதிருக்கின்றேன்.

எனதண்ணு அவருக்குன் பூங்காவனத்திலுள்ள பன்ன சாலையிலேயே ஆஸ்ரம மமைத்திருக்கிறார். நீஸ்வஸ்ருஷைகளால வரைத்ருப்தி செய்தால் நீ எண்ணிய தெளிதிற் கூடும் இப்படியே குந்திதேவி துர்வாச முனியிட மரிய வரத்தைப் பெற்றாள்.

சுபத் :—என்னாற் கூடுமட்டும் வெகு சிரத்தையுடன் செய்கிறேன். அண்ணா! அவர் எந்நேரமெது கேட்பினும் சித்தமாய்ச் சமர்ப்பிக்கிறேன். நீங்களு மவ்விஷயத்திலெனக்குதவு வீரென்றுன்னுகிறேன்.

கிருஷ் :—சந்தோஷம், கனிந்த பழங்கள் தானவருக்கு முக்கிய ஆகாரம். மற்றுமவர் கேட்டதை உடனே சமர்ப்பிக்க வேண்டும்.

சுபத் :—இதென்ன சிரமம்! நானெல்லாம் பார்த்துக் கொள்ளுகிறேன்.

கிருஷ் :—நீ எல்லாம், முடிவு வரையில் பார்த்துக்கொள்ளுவா யென்று தானே உன்னிடமழைத்து வந்தது. அவர் இங்கே ஒரு மாத மிருப்பார்.

சுபத் :—சரி, இவரைக் கூட்டிச் செல்லுங்கள்.

கிருஷ் :—[ரிஷிபுங்கவரை நெருங்கி] சுவாமீ! சுவாமீ!

[ரிஷிகண் விழித்து மேலே பார்க்கிறார்]

சுவாமீ, நான் மண்ணில் தானிருக்கிறேன். விண்ணில் தேடவேண்டாம்.

ரிஷி :—சர்வம் விஷ்ணுமயம் ஜகத்தாகவே யிருக்கிறது. நான் பார்க்கு மிடமெல்லாமுன் காந்திமயமாகவே யிருக்கிறது.

கண்ணனே கருத்திலுள்ளாய்
காணுவதனைத்து முள்ளாய்
அண்ணலே கொண்டாயுன்னுள்
அண்டங்களனைத்து மின்னும்

எண்ணுவ தெல்லாமுன்ற
னெண்ணிலா லீலைதாமே
தண்ணருள் வைத்தென்மீது
தந்தருள் தானைநீயே.

கிருஷ் :—சுபத்ரா, மகா பக்தசிகாமணி அவர். சதா நாராயணத்யானத்திலேயே யிருப்பார். நாராயணனு மவரெண்ணத்தை நிறைவேற்றுவார். நீங்க ளிருவரும் போய் பன்னசாலையை மெழுகிச் சுத்தஞ் செய்யுங்கள். நானவரை யழைத்து வருகிறேன்.

[சுபத்ராவும் சாந்தாவும் போகிறார்கள்]

சுவாமீ! யதீஸ்வரரே! கிளம்பும்! கிளம்பும்! தியானத்தையின்று சுபத்திரையின் மணம் வரை கொண்டுபோய் விட்டீரே!

ரிஷி :—ஆஹா! என்ன பக்தி! என்ன பணிவிடை! என்ன அடக்கம். கிருஷ்ணா! எனக்குச் சக்தி யிருந்தால், வாஸ்தவத்தில் இவளை இந்திர விமானத்திலேற்றி மூவுலகையும் சுற்றி வருவேன்.

கிருஷ் :—அப்படி யடித்துக் கொண்டுபோய் விடுவாயென்று தானே உனக்கந்தச் சக்தியைக் கொடாது, என்னையு மவளுக்குக் காவலாய் வைத்திருப்பது. அருச்சுனா, இனி உன் சாமர்த்தியத்தினால் தான் மற்றதெலா மாக வேண்டும். ஆனால், இதமாய் மெல்ல மெல்ல சமாச்சாரத்தை வெளியிடு. அவளே உன்னை யெல்லாம் கேட்பாள். பெண் மனந்தானே. நீ பலராமரைப் பற்றி மட்டும் கொசனும் எச்சரிக்கையாயிரு.

ரிஷி :—சரிநாம் செல்வோம். பெண்மணிகள் நமக் காகக் காத்துக் கொண்டிருப் பார்கள்.

கிருஷ் :—பெண்மணிகள் பேரிலென்ன அவ்வளவு பரிவு இன்று. சரி வாரும் போவோம்.

[நிஷ்க்ரமித்தல்]

## அங்கம் II,

### களம் : 3.

அருச் :—நாராயண ! நாராணன ! இனி யொருவரும் வரமாட் டார். ஆ ! ஜபமாவது, தவமாவது, பூஜாக்ரகமாவது ! சுபத்ராவேஜபமந்த்ரம் ! அவளையடைந்து சீக்கிரம் ஊர் திரும்புவதற்கே தவம். பூஜாக்ரகம் ! இது வெளிபூஜை யன்றோ ? சுபத்ரா வென்பதற்குப் பதில் தான் நாராயணா வென்கிறேன். அவளையே நினைத்திங்கு மானசபூஜை செய்கிறேன்

ஆ ! அவள் இவ்விடத்தை விட்டுச் சென்ற போதிலும், என் கண்ணையும் மனத்தையும் விட்டரைக் கணமும கலவில் லையே ! ஆ ! அலர்ந்த செந்தாமரையைப் போன்ற வதனியே ! உனததரத்தின மிழ்தை யருந்த வேயலேகிறேன். அதுவே யென்மருந்து. அதைப்பருகும் பாக்கிய மெனக் கெப்போது வருமோ !

வாரங்களிரண்டாயின. சுபத்தி ரையும் வெகு சிரத் தையுடன் நமக்குப் பணிவிடை செய்கிருள். ஆ ! தனது

மெல்லி யகரங் களால் புஷ்பத்தை யெடுத் தெனக்குப் பாத பூஜை செய்யுங்கால், நாமு மந்தப் புஷ்பமாயிருந்தால், அவ ளுடைய கரஸ் பர்சத்தினுல் புனிதனுவோமென்று தோன்று கிறது. எனதாலயத்தி லமர்ந்ததேவியே! நானு மதிதீவிர பக்தியுடன் மனதிலுன்னையே ஸ்மரிக்கிறேன்.

அவள் தான் தரையைப் பார்த்த வண்ணம் பாதபூஜை செய்துவிட்டுத்தன் காலைப்பார்த்து நிற்கிருளே. அவள் என் மேல் காதலுற்றிருக்கிரு ளென்று ஜாடை யாய்த் தெரிந்தால் போதும் ஆ! மானேர் விழியே! "மங்களானிபவந்து" என்று சொல்லி எத்தனை நாள் கரந்திருப்பது? என்று நான் உன்னைக் காதலீ" என்றழைப்பது. என்று நீ என்னை "நாதா" வென்று துதிப்பது? இச்சந்நியா சத்தைக் களைந்தவள் முன் நிற்கலாமா? அப்பொழுதாவது வீரனென்றென்னை விரும்புவாளா? ஆ! அதற்கொரு சத்துரு விருக்கிருன். நான் இன்னுரென்று தெரிந்தால் பலராமரின் பகைக்குள்ளாவேன். பிறகு இவ்விடம் விட்டு வெளியே போக வேண்டியதுதான். போவதாவது? அதற்குச் சாவதே நலம். இங்கேயிருந்தாலாவது அவளின் சேவை கிடைக் கிறது. இதை விட்டேனின் "சுபத்திரா" வென்று கூவவேண் டியதுதான். ஈசனே! இன்னு மெத்தனை நாள் ஆகார நித் திரையின்றி யிருப்பேன். அல்லேல் ஒற்றை யன்றில் போலுடல் மெலிந்திறப் பேனே அறியேன். [காலடிச்சத்தம் கேட்கிறது] நாராயண! நாராயண!

பிரவேசம்: சுபத்ரா, சாந்தா:

சாந்தா:— சுபத்ரா! எல்லாம் சுவாமிகளுக்குத் தயாராய்க் கொண்டு வந்துவிட்டேன். பாதரக்ஷைகளுக்குப் பூஜி

[சுபத்திரை பூஜித்து நமஸ்கரித்தல்]

அருச் :—மங்களானி பவந்து! நாராயண! நாராயண!

சுபத் :—சாந்தா? பாலையும் பழத்தையும் சமர்ப்பித்துவா.

[சுபத்திரை தரையைப் பார்த்தவண்ணம் நிற்கிறாள்]

சாந்தா:—[பழத்தைக்கொடுத்து அவர் தின்னும்போது திடுக்கிட்டு] (மனதுள்) ஆ! இப்பொழுதே கண்டேன் (வெளியாய்) சுவாமிகள் ஒரு சுத்த வீரனாயிருந்தவர்போல் காண்கிறதே. மனச் சலிப்பினால் சந்நியாசம் பூண்டாற்போல் தோன்றுகிறது. அந்த ஞாபகந்தான் தேகத்தை இப்பொழுது பாதிக்கிறதோ?

அருச் :—அம்மா, நான் வீரனாகத்தானிப்போது மிருக்கிறேன் இல்லாவிடில் இவ்வளவு வைராக்யம் வருமா? சரி, சந்துஷ்டியாய் விட்டது. சுபத்திரையை மெல்ல நடத்திக் கொண்டுபோ.

[சுபத்திரை நமஸ்கரித்தல்]

சுப்த்ரா! உனக்கு அமோகமான மங்கள முண்டாகுக! நிகரில்லா வில்லாளனையே நின்னாளனாய்க் கொள்வாய், கன்னீ!

சுபத் :—சுவாமீ! எல்லாம் தங்களா சீர்வாதத்தாலேயே; நான் உத்தரவு பெற்றுக் கொள்ளுகிறேன்.

அருச் :—நாராயண! நாராயண! [தலையை யசைத்துக்கொண்டே]

(சுபத்ரா நிஷ்க்ர மித்தல்)

ஆ! சுபத்ரா! என்னெதிரே பூரண சந்திரனைப்போல் விளங்கிய சுபத்ரா! உன்னைக்காண என்மனமாகிய வாரீ

யினின்று, விரகமெனு மலைகள் பொங்கி உன்னிடம் வர முடிந்தமட்டும் பார்க்கின்றன? நீ அவ்வளவு உன்னதத் தினின்றென்னைப் பரிகசித்தலடுக்குமோ? நெருங்கி வர லாகாதா? ஆ! இப்பொழு தென்முன் நின்ற இரவியைக் காணேமே! அதற்குள்ளா மறைந்து விட்டது? ஆ! இப்பொழுதென் காதல் கண்ணிழந்ததே! ஏ அனங்கா நீயும் நேத்திர மில்லோன்! நீயிருக்குமிட மெனக்குத் தெரியவில்லை. என் மதியை யுங்கண்ணையுங் கெடுத்தவா இதற்கெல்லாம் அச்சிவனாரே உன்னைச் சிக்ஷிப்பார்.

[திரைவிழுதல்]

---

## அங்கம் II.

### களம்: 4.

இடம்:—சுபத்திரை யினந்தப் புரத்திலோர் முற்றம்:
காலம்:—சாயங்காலம்:

பிரவேசம்: சாந்தா.

இருக்கலாம்! இருக்கலாம்! சாந்தா சொல்வதைப் பார்த்தால் எனக்கவர் பால் சந்தேகமாகவே யிருக்கிறது. அவள் சொல்லுகிறபடியே யிருந்து விட்டால், எவ்வளவு சந்தோஷம்! அதை நினைக்கும் போதே என்மனம் பூரிக்கிறது அம்பிகே, சர்வலோகப்ரியே! சர்வாபீஷ்ட முண்டாக்க வேண்டும்.

(அனுபந்தம் 9.)

ஆ! பார்த்த னைப்போல் வீரர் இப்புவியிலாருளார்? அவரே வீரருட் சிங்கம். அழகிலருச்சுனன், வித்தையில்

விஜயன், கீர்த்தியில் கிரீடியென்கின்றுருலகோர். அனைவரு மவர் நாமத்தைக் கொண்டாடு கிறார்கள். நானுமதையே ஜபித்துவரு கிறேன்.

ஒரு சமயம் பார்க்குங்கால் மனம் தேர்ச்சி யடைகிறது. என் பாக்ய வசத்தால் நான் பூசித்த பெரியோரெல்லாம். "மகத்தான வீரனையே மணம்பு ரிவாய்" என வாழ்த்தியிருக் கின்றனர். அதற்கிணங்க, நமது மாளிகைக்கு விளக்கென விளங்குமிப் பெரியவரும், நிகரில்லா வில்லாளனே என்னைக் குரு தேசத்தினின்று வந்துமணப்பானனென்றார், அப்பொ ழுதே என்மனம் பூரித்தது. நாணத்தால் முற்றும் கேளாது விடுத்தேன். மேலும் தீர்த்தாட னத்திற்காக அவரி ப்ரபா சநதிக்கு வந்திருப்பதாக அண்ணு சொன்ஞர். வந்திருந் தால் எனதண்ணனை யாவது காண வருவாரன்றே? அப் பொழுதவர் திருச் சேவைகிடைக்கும்.

இருக்கட்டும், நேற்று சாந்தை, ரிஷிபுங் கவரிடம் வீர னுடைய சின்னங்களும், முக்கியமாய், என்மனதைக் கவர்ந்த அவ்வீரசிகாமணியின் சின்னங்களாகிய, பல் லொளி, நாவில் நக்ஷத்திரம், முதலிய வற்றையும், பார்த்ததாகச் சொல்லு கிறாள். அவளையும் நான் நம்புகிறேன். மேலும், அவர் பால், நெடு நாளாய் எனக் கொருசந்தேகமுண்டு. அவரு டைய திரு முகைத்தைப் பார்க்கும் போதெலாம் என் காதல னின் ஞாபகமே வருகிறது. அது என்னையவர் முன் நாணும் படி செய்கிறது. மேலும், நேற்றிரவு, அம்முனிவர் என் புஷ்ப மெத்தையை யணுகி என்னைத் தொட்டது போலிருந் தது. அதுமுதல், என் மனம் அவர் மிசைகல் மிஷப்பட்டே யிருக்கிறது. ஆகட்டும், இன்று தனியே யவரிடம் பேசி, நம தெண்ணத்தை வெளியிடுவோம்.

பிரவேசம்: சாந்தா.

சாந்:—சுபத்ரா! நான் சொல்லும் போதனைக்குப் பரிகாச மாகவே யிருக்கும். இன்று தனித்துப்போய் தைரிய மாய் நெருங்கிப் பேசு. உள்ளது வெளிவரும். நீ அருச் சுனரை நேசிப்பதாக மட்டும் அவருக்குச் சாடையாகத் தெரியட்டும். உனக்கு நான் சொல்ல வேண்டுமோ? என் குருவன்றோ நீ.

சுபத்:—நான் பேசும் போது நீ மெள்ள வெளியே வந்துவிடு. உனக்கு நான் சொல்ல வேண்டுவதில்லை.

சாந்:—இன்று வைகுண்ட ஏகாதசி. அவர் நிராகாரராய் நித்திரை துறந்திருப்பார். நீ விடாமல், கதாகாலக்ஷே பத்திற்குப் பதில், அவரையே சோதித்துப் பார். புறத் திலிருந்து நானுனக்கு வேண்டிய உதவி புரிகிறேன். சுபத்ரா! எப்படியாவது நீ பார்த்தனையடைய வேண்டு மென்பதே என தெண்ணம்.

சுபத்:—உன்மனப் படி முடிந்தால் எனதன் பாகிய அழிவற்ற ஆபரணத்தை யுனக் களிக்கிறேன். சரி, சீக்கிரம் போ வோம் வா.

[நிஷ்க்ரமித்தல்.]

---

## அங்கம் II.

### களம் 5.

இடம்: பன்னசாலை: காலம்: இரவு:

அருச்:—இன்று விடப்போகிறேனா! சந்திரா! உன்னினும் பொலிவுள்ள பொற்கொடி, களங்கமற்ற மதிவதனி

இதோ வருகிறாள். நீ நிலையற்றவன், க்ஷீணிப்பவன், களங்கமுற்றவன். இப்பொழுதுன் தீயகிரணங்களாலெ ன்னை வருத்துகிறாய். வெங்கானலெழுப்புந் தென்றலே இக்குளிர் முகத்தினளோடு நீ போர் தொடுப்பயோ? இதோ உன்னை வெல்ல பலமான துணைவி, உன்னினும் பதின் மடங்கு பலத்துடன் வருகிறாள்.

பிரவேசம்: சுபத்ரா, சாந்தா.

நாராயணா! நாராயணா! ஏ பக்தசிகாமணிகாள்! இப்படி என்னெதிரே வீற்றிருங்கள். இன்று கதா காலக்ஷேபம் செய்யப்போகிறோம்.

சாந்தா:—சுவாமீ! அதற்காகவே இன்று வந்தோம். மேலும் தங்கள் திவ்விய சரிதையைக் கேட்கவே ஆவலானோம். பக்தரின் சரிதையைக் கேட்டல் பரமனின் சரிதையைக் கேட்டலேயாகும்.

அரு:—அங்ஙனமே யுரைப்போம். சுபத்ரா! இப்படி என்ன ருகே வீற்றிரு.

சாந்:—தங்களுடைய உண்மையான சரித்திரத்தை யுரைத் தால், அடிகளிட மெமக் கிருக்கும் பக்தி யதிகரிக்கும். அடிகளுரைப்பதை யெல்லாம் மனதுட் படியவைப்போம். தங்களுறைவிட மெது? தாங்களிங்குற்றதெதனால்? தங் கள் முகக் குறியையும் கண்ணன் தங்களிடமிருக்கும் நேசத்தையும் பார்த்தால்......

அரு:—(மனதுள்) இனி நாமிவளைச் சோதிக்கலாகாது (வெளி யாய்) சுபத்ரா! உன்னிட மிருக்கு மன்பின் மிகுதியால் (மனதுள்) ஏன் காதலென்றே சொல்லக் கூடாது? (வெ ளியாய்) நீ வினவியதனைத்திற்கும் விடை பகருவல்.

இல்லாவிடில் இச்சரீரம் தன்னைப் பற்றிப் பேசுவதில்லை.

சுபத் :—நானும் ஆவலுடன் கேட்கத் தயாராயிருக்கிறேன். திருவாய் மலர்ந்தருளவேண்டும்.

[சாந்தா நிஷ்க்ரமித்தல்]

அரு:—அம்மணீ! (மனதுள்) என் கண்மணீ யெனலாகாது?

சுபத்:—ஏன்தயங்குகிறீர்கள்? ஒன்றும் யோசியாமல் மேலே சொல்லலாம்.

அருச்:—அன்று நீ யுரைத்தபடி யானொரு இணையில் வீரன்.

சேயிழையே! என் சரித்திரம் செப்புவேன்
பாரொளிக்கழல் புனைபவனொரு வீரன்யான்
அறந்திகழ்ந்தருவளம் ஆர்குருதேயம்
பிறந்தவனிந்திரப்ரத்தமென் சொந்தவூர்.

சுபத்:—(மனதுள்) இணையில் வீரன், குருதேசம், அதிலும் இந்திரப்ரத்தம்! (வெளியாய்) ஆயின், பாண்டவரைத் தெரிந்திருக்குமே தங்களுக்கு. அவர்களை யுலகு ஆதித்யனைப் போன்றறியுமே.

அருச் :—அவர்களை எனக்கு நன்கு தெரியும். எனக்கு மிகவும் வேண்டியவர்கள். அருச்சுனர் தீர்த்தாடன நிமித்தமிங்கு வந்திருக்கிறார்.

சுபத் : –(மனதுள்) அருச்சுனர் வந்திருக்கிறார். ஆனால் இவரில்லை யோவவர்? போனகவலை திரும்பியதே. ஏதோ இன்னும் பார்ப்போம். (வெளியாய்) அடிகளே!

அருச் சுனரைக் குறித்த றைகுமி னெனக்கு
விரிச்ச வருறைவிடம் விளம்புமே லடிகளும்
அவர் வரலாறெனக் கரிகதையாகும்
அவர்திருச் சேவையே அரிதனின் சேவை.

அருச் :—கன்னீ !

புண்ணிய நதிபல பொருந்தி நீராடி
நண்ணினரிந் நகர் நலமுடன் வேல் வரிக்
கண்ணியே ! யுன்றனைக் கடிமணஞ் செய்திடும்
எண்ணமே கொண்டக மிருப்பதாயினரே.

சுபத் :—ஆ ! அவ்வளவு பாக்யவதியா யான் ! அடிகளே ! அவரிருக்கு மிடத்தைத் தெரிவிக்க வேண்டும். அவரைக் காண அவாமிகுந் திருக்கிறேன்.

அருச் :—கன்னீ ! அவரி ருப்பிடமுஞ் சொல்லி அவரையுமிவண் வரச் செய்கிறேன். நான் கேட்பதற்கு நாணாது விடை யளிப்பாய்.

கொவ்வை நேரிதழாய் ! பார்த்தன்
குலவியவிடமேதென்ன
அவ்விடமணுக நீயு
மாவலுற்றறைவ தேனோ ?
செவ்வையா யுரை ப்பாயாகில்
சேர்ப்பிப்பன் மகிழத்தானே
எவ் வினை ரிடத்திலும் யா
னிசைத் திடேனெழிலார் மானே !

சுபத் :—(அனுபந்தம் 10.)

அடக் கொணுக் காதலுற்றேன்
ஆண்டகை தன் மேல் யானே
தடக் கையா லென்றன் தாபம்
தணித் தருள் புரிந்தாலுய் வேன்
திடக் கருத்துடனே வீரன்
திருவடி வெண்ணி யெண்ணி
உடற் குறைந் தேனென்னுத
னுறை விடமுரைப்பாய் நீதா !

அருச் :—(மனதுள்) ஆ! எத்தனைநாள் மையலோ ஆத்திரத்துடன் வருகிறது. இனி நாமிவளை வருத்தலாகாது. (வெளியில்) ஏ பெண்ணே! இனி கண்ணே யென்றழைக்கலாம். கண்ணே [சுபத்திரை தள்ளி நிற்கிறாள்.]

(அனுபந்தம் 11.)

தாங் கொணுக் காதலோடு
தனஞ் சயனுன்னை வேண்டி
ஈங்குற் றுரவவரைநீயு
மினிமை யாய்ப் பூசித்தாயே
வீங் கொளி பரப்பும் வேந்து
வீட்டகத் தரசு செய்ய
ஏங் கியே தேட லேனோ
என்கண்ணே எழிலார்மானே!

சுபத் :—ஆ! நாதா! அவ்வளவு பாக்யவதியா நான்! (எழுந்து கைகூப்பி)

உடல் மெலிந்து றக்க மின்றி
உள்ளுறத் துன்ப மேவிக்
கடல் விண்ட தென்னக் கண்ணீர்
கலுழ்ந் திடக் கலங்கி யாவி
விடல் நல மென்ற போது
விசையனைக் காணு தாங்கு
திடமுடன முதமீ யத்
தேடியே வந்த தென் கொல்?

அருச் :—அள வுண்டோ வடியேனுற்ற
ஆசைக் கிங் கரியமானே!
உளம் வெடித்திறப் பேன்நானென்
றுன்னி னே னுன்னைக் காணக்

களவதாய் வந் தேனீண்டுன்
கருணையை யடைந்ததாலே
துளவம தணிந்த மாலின்
துணை யினாற் களி கொண் டேனே.

காதலீ ! நம தெண்ணம் கண்ணனின் துணையால் நிறை வேறியது. அவரென்னை யேற்றி வைத் ததனாலேயே யுன் னால் பூசிக்கப் பெற்றேன்.

சுபத் :—(அனு பந்தம் 12.)

அருச் :—(அனு பந்தம் 13.)

கண்ணே நமது காதல் கரவா யிருக்கட்டும். ஊர் திரும்பு மட்டும் நான் காஷாய தாரியாக வேயிருக்க வேண்டும். பல ராமருக்கு யானிங்கிருப்பது வெளியாயின் கோகுலமுழுது முயுத்த களமாகும். கரவாயி ருந்தே கண்ணனின் துணையால் கடிமணத் தைமுடிப் போம். பிறகு யார் தான் நம்மைப் பிரிக்க முடியும் ? அப்போது பலராமர் வரினுஞ்சரி, பல பல, பலராமர் வரினுஞ் சரி, நமது காண்டீபம் மற்ற விஷயங் களைப் பார்த்துக் கொள்ளும்.

சுபத் :—நாதா அது வரையி லென் மனம் சஞ்சலப் பட்டுக் கொண்டே யிருக்கும். ஆ ! இப்பொழுதே ஞாபகம் வந்தது. சிவாலய மகோற்சவத்திற்காகப் பல ராமர் அருகிலிருக் குந்தீவிற்குச் சென்றிடுவார். கோகுல வாசிகளனைவரு மவருடன் போய் விடுவார்கள்.

அருச் :—அன்றைய தினமே கடி மணத்தி ற்கிசைந்த நாளெனக் கண்ணன் சொன்னார். அது வரையில் சந் தேகத்திற் கிடமின்றி ஸன்னியாஸ ஒழுக்கங்களைப் பலமாய் நடத்து.

(பின்னே சாந்தா கூவுகிறாள்.)

சாந்தா :—சுபத்ரா! சுபத்ரா! நாழிகையாய் விட்டது உறங்கப் போக வேண் டாமா?

அருச் :—யார் சாந் தாவா? நாராயண! நாராயண! நடைய னமே, போய் வா.

சுத்ப :—இதோவந்து விட்டேன், சாந்தா!

சாந் :—மணி இரண் டாயிற்றே இன்னுமா ஹரிகதை முடிய வில்லை. கதாகால க்ஷேப மிந்நேரமா? சுபத்ரா! அந்தப் புரம் செல்வாம் வா.

[நிஷ்க்ரமித்தல்.]

அருச் :—நாராயண! நாராயண!

(திரை விழுதல்.)

---

## அங்கம் III.

### களம் I.

இடம் :—சுபத்திரையின் அந்தப் புரத்திலோர் முற்றம்:

காலம் :—இரவு.

பிரவேசம் : சாந்தா :

சரிதான், நான் சந் தேகித்த வண்ணமே நடந்திருக் கிறது போலத் தோன்றுகிறது. நானகன்ற பிறகு நடந்தச மாசாரம் முற்றுந் தெரியவில்லை. நேற்றிரவிலவள் இமை கொட்டவில்லை : என்னுடன் பேசவுமில்லை. ஏதாவது பேச் செடுத்தாலும் "நாதா" என்று பெருமூச்சுவிட்டாள். என் னையும் தூங்க வொட்டாமல் "சாந்தா" என்றடிக்கடி கூவி "என்னைச் சாந்தப் படுத்துவாய். என்ன இவண் இவ்வளவு வெப்பாயிருக்கிறது" என்று தென்றலைக்குறித்துச் சொன்ன வுடன் நான் வேறுவிதமா யெண்ணிவிட்டேன். பிறகு "புஷ்

பமெத்தை யிலுள்ள ஒவ்வொரு அரும்பும் ஒவ்வொரு பாண மெனத்தைக்குதடி" என்ற வுடனே, "ஓகோ, இது மன் மதனின் திரு விளையாடல்" என்று நிச்சயித்து, அருச்சுன ரைப் பற்றியே பேசி, அவருடைய படத்தைக் காட்டிய வுடன், வெகு நேரம் அப்படத்தோடு பேசி விட்டுப் பிறகு, புலம்பலும் தூக்கமுமாய், ஓர் நீண்ட மாரி காலத்தைப் போல் இரவைக் கழித்தாள். இன்னுமிதைக் குறித்தே பேசி விஷ யத்தையறிய வேண்டும். இதோ அவளும் வருகிறாள். அவ ளுடைய முகவனப்பை நோக்குங்கால் அவளிஷ்டம் பூர்த்தி யாயிருக்க வேண்டுமென்றே தோன்றுகிறது.

பிரவேசம் : சுபத்திரை.

சுபத்ரா ! வா ! இன்று நல்ல நிலவாயிருக்கிறது. நாமிங்கு சத்கால க்ஷேபஞ் செய்வோம். இம்முற்றம், பரமனின் நெற்றி போன்று நிலாக் கற்றையால் விளங்குகிறது.

சுபத் :—இருக்கட்டும், சுவாமிகளுக் கெல்லாம் சந்துஷ்டி தானே.

சாங் :—அவர் கொஞ்சங் கூடத்ருப்தியடைய வில்லை. நீ வந் தாலன்றோ அவருக்கு த்ருப்தி. இன்று நாராயணா வென்ற சப்தத் தைக் கூடக் காணோம். நான் போகும் போதேதோ பாடிக் கொண்டிருந்தார், "மங்களானி பவந்து" என்று கூடச் சொல்லவில்லை, சுபத்திரை ஏன் வரவில்லை யென்று மட்டும் வினவினார். "உடம்பு சௌகரியமில்லை சுபத்திரைக்கு" என்று நான் சொல் லச் சால வருந்தினார்.

சுபத் :—எனக்காக, உன் தகப்பனாரிடம் சொன்ன லேகியம் தயாராயிற்றா ?

சாங் :—லேகிய மெதற்கு ?

சுபத்:—என்னுடல் ஒரு மாதமாய் மெலிவுற்று வருகிறதே தெரிய வில்லையா? நேற்றிரவு நித்திரையே வர வில்லை.

சாந்தா:—உன் முகம் மூன்று நாளாய் முன் போல் செழிப்புற்றே காண்கிறது. அதைப்பார்க்கும் போது நெடுநாளாயம் மருந்தை யருந்தி வருகிறாயென்றல்லவோ நினைத்தேன். இன்னுமதைக் கொள்ள வில்லையா? ஆனால் நேற்று நீ பட்ட பாட்டிற்குப் பரிகாரம் உன்சத்குருவிடந் தானிருக்கிறது. (கண் சிமிட்டல்.)

சுபத்:—ஆனால் நானிப் பொழுது செழிப்புற்று இருக்கிறேன்.

சாந்: ஆம் அன்று ஹரிகதை கேட்டது முதல். சாமியார் சரியான மருந்து கொடுத்து விட்டார் போலத் தோன்றுகிறது. என் தோழீ! என்னிடம் கூறுயோ நினதுண்மையை, நான் சொன்னவண்ணமே நடந்ததன்றோ? அவர் அருச்சுனர் தானே.

சுபத்:—எனதருமைத்தோழியே! மனதில் விளங்கும் மங்களஒளியைத் தெரியாதலையும் அக்ஞானிபோல் நான் அவரைப் பலவிடங்களில் விசாரித்தேன். ஆ! அவர் என் கிரகத்திலேயே விளங்குகிறாரென் றறிந்திலன். நான் பூசித்தபொருளே யான் விரும்பியது. என்னை வேறெங்கும் தேடவேண்டாம். உன்வசமே யிருக்கிறேனென்று அவர் என்னிட முரைத்தபோது என் ஆனந்தத்திற் கெல்லை யில்லை.

(அனுபந்தம் 14)

சாந்தா: (அனுபந்தம் 15)

சுபத்திரை: (அனுபந்தம் 16)

சாந்தா:—உலகெலாம் புகழும்வீரன்
உயரருங்கலைகள்கற்றோன்

நில வுமிழ்குடையன் மாரன்
நேரிலா வழகன்யாரும்
இலகிடு முவமை சொல்லற்
கிசைந்த வள்ளலை நீ பெற்றாய்
பலபல மைந்தர்செல்வம்
பரித்து நீடூழிவாழி !

சுபத் :—வந்தன மனந்தமுன்றன்
வஞ்சமில் வாய்மொழிக்குத்
தந்தனன் முத்துமாலை
தயையுடன் பெறுவாய் என்றன்
சந்தமார் மணத்தின்றன்மை
சாற்றிடாய் வெளியதாகில்
சுந்தரராமர் கோபச்
சுடுசரந் தொளைக்குமம்மா.

சாந்த :—சுபத்திரா ! உன்னைவிட்டொரு கணமும் பிரியாத எனக்கு யாரிடமாவதணுக நேரமுண்டா ! யானை இச்சந் திரனறிய ஒருவரிடமும் சொல்லவில்லை.

சுபத் :—சாந்தா இச்சந்திரனைக்குறித்தாணையிடாதே. அவன் என்சத்ரு. அவனுடைய தீயகிரணங்களால் என்னை வருத்துகிறான். மேலும் அவன் க்ஷீணிப்பவன். அவன் மே லாணையிட்டால் உன் வாக்கும் குறைவுறும்.

சாந்த:— என்கற்பின்மேலாணையா யொருவரிடமுஞ் சொல்லவில்லை. சரி, சயனக்ரகஞ் செல்வோம்வா.

(நிஷ்க்ரமித்தல்)

## அங்கம் III

### களம் : 2.

இடம்:—கிருஷ்ணனின் அரண்மனை. காலம்: மாலை

[தேவகி, கிருஷ்ணன், பலராமர், உருக்குமணி, எல்லோ ரும் வீற்றிருக்கிறார்கள், புரோகிதர் உயர்பீடம் வகித்தி ருக்கிறார்]

**தேவகி:**— எனக்கோ வயோதிகங்கிட்டியது. எப்படியாயினும் சுபத்திரைக்கு இவ்வருஷம் மணமுடிக்கவேண்டும். அப்பா! ஒரு தகுந்த மாப்பிள்ளையை யடைய, பெண் ணைப்பெற்றவர் உலகில் என்ன பாடுபடுகின்றனர். நாமே இந்தப் பாடுபட்டால், ஏழைக ளென்னசெய்வார்கள். அசாத்தியமான வரதக்ஷணைக் கெங்குசெல்லுவார்கள். உலகில் பெண்களை யொருபடி கீழாகவே யெண்ணியி ருக்கிறார்கள் போலும் ஆடவர்கள். பெண்களின்றித் தானிப்புருட சிங்கங்கள் பேர்பெற்று விளங்குகின்ற னரோ? பெண்ணின்றித் தனியாய் ஒரு ராஜ்ய மிருத்த லும் கூடுமோ? நமது பதிவிரதா சிரோன்மணிகளாலும் உத்தமிகளாலுமன்றோ நம்பாரதநாடு "பாரிலுயர்ந்த தேசம், சாஸ்த்ரவேதகீதங் கமழும்நாடு" என்று பாட ப்பெற்றுள்ளது. வீரர், முனிவரெல்லாம் எங்கிருந்து குதித்தார்கள்? பலராமா, இப்படி மாப்பிள்ளைக்காக அலைந்து வீண் சிரமப்படுவதினும் சுயம் வரம் வைப் பதே சிலாக்கியமெனத் தோன்றுகிறது. முதலாவது, குழந்தையி னிஷ்டப்படி கணவன மர்வான்; நமக்கும் சிரமக்குறைவு.

**கிருஷ்:**—அம்மா, அவ்வளவு சிரமங்கூட எதற்கு? கையில் வெண்ணெயிருக்க நெய்க்கலைவாருண்டோ? இப்பொழு

தென்வசம் ஒரு வீரருள் வீரனிருக்கிறான். அவன் சமர்ச் சிங்கன். புஜபலபராக்ரமமிகுந் தோன். காலனும் வெருவும் வீரன். வித்தையில்பிரகஸ்பதிக்குக்குறைந்தவனல்லன். சுயம் வரம்வைத்தாலுமவனே மாப்பிள்ளை, இல்லாவிடினு மவனே மாப்பிள்ளை.

பலரா:— அதுயார் கிருஷ்ணா ? அப்படிப்பட்டவனைக் கைவசம் வைத்துக்கொண்டா எங்களை யிப்படியலையச்செய்கிறாய். நீ சொல்பவன் சரியானவனானால் இன்று நான்காவதுநாள் முகூர்த்தம். வைத்து விடுவோம்

கிருஷ்:— அண்ணா, கோபமின்றிக் கேட்டால் கூறுகிறேன். அவன் என் ஆப்தன். அவனுடைய வரலாறனைத்தையும் யான் அறிவேன். பெண்ணுக்குப் பிடித்தவன், ஈடானவன். அத்தகைய இணையில்லாப் பாரேத்தும் பார்த்தன்.

பலரா:—இதோ, நிறுத்தம்மட்டோடு. என்ன பேச்சுப் பேசினாய். அவன் பெயரை யினிமேற் சொல்லாதே.

கிருஷ்:—அவன் பெயரின்னு மிருக்கிறது; பார்த்தன், பற்குணன், கரியோன், கிரீடி, விசயன், சவ்வியன், ஸ்வேதவாகனன், தனஞ்சயன், அருச்சுனன் ...........

பலரா:—என்ன, கிருஷ்ணா ! வீம்பாசெய்கிறாய் ? வெட்டிப் பயல்கள் பேச்சு. முடிந்தால் உன் இஷ்டப்படி நடத்து. பஞ்சபாண்டவராம், பத்தினியொருவளாம். அவர்களிடமவள் படும்பாடு ஈசனுக்கே தெரியும். பொதுப்பத்தினியொருவள். ஒவ்வொருவருக்கும் தனிப்பத்தினிகள் வேறு. என்னடா ஆபாசம். அதிலும் இவன் மூன்றாவது யோக்கியன், போகிற விடமெல்லாம் பெண்திருடுபவன். மூத்தவன் அப்பாவி, சாது.அவன் பெயரை இவன்

கெடுக்கிறான். என்னவோ தீர்த்தாடன நிமித்தம் இப்பக்கங்களுக்கு வந்திருக்கிறானாம். எங்கே வேஷம்போட்டு நம் வீட்டிலும் மோசம் செய்கிறானோ வென்றபயம் மனத்திலிருக்கிறது. வில்வித்தை கற்றானும் எதற்காயிற்று. நாளையே துரியோதனாதிகள் காடாளும்படி விடப்போகின்றனர். அப்போது காண்டீபம் உதவும். நமது சுபத்திரையும் கூடப்போய் வேட்டைப் பொருள்களைச் சுமக்கலாம்.

கிருஷ்:—அண்ணா! பாரதத்தின் முடிவை ஒரு நொடியிலுரைத்துவிட்டீரே! சண்டையின்றி ஒரு பாரதம் தண்டா வெழுதுவீர் போலும். அம்மூர்க்கனை நீர் உயர்த்தினால் உயர்ந்து விடுவானோ? பாண்டவர்க்குக் கௌரவரால் விளையும் கஷ்டமெலாம் பாண்டவரின் பொறுமையையும், ஞானத்தையும், வீரத்தையும், சீர்மையையும் உலகப்பிரசித்தி யாக்கவென்றே யென்றறியீரோ? முடிவில்பாரும், தர்மமா, அதர்மமா, ஓங்கியதென்று. ஈசனொருவன், நடுநிலைமையினின்று, துஷ்ட நிக்ரக சிஷ்ட பரிபாலனஞ் செய்கிறானென்பதை மறந்தீரோ? யுகே யுகே தர்ம சமஸ்தாபனார்த்த மவதரித்து சாதுக்களை ரக்ஷிக்கிறானென்ற மெய்ம்மையை மறந்தீரே. நான் சும்மாவிருந்தால் தூஷணைகளைச் சரமாரியா யடுக்குவீர் போலும். ஏது சிசுபாலனைப்போலாரம்பித்து விட்டீரே. இது காண்டீபனுக் கெட்டுமாயின், எட்டாமற்போகாது, இரேவதி முழுதும் இரத்தமாகும். அதைத்திண்ணமாய் எண்ணும். கல்வி, பக்தி, வீரம், அழகு, செல்வாக்கு, கீர்த்தி இவற்றினு மொருவனுக்கென்ன உயர்வு வேண்டும். இவையெலாம் அவனிடம் பரிபூரணமா யிருக்கும் புகழை நம் நாட்டிலேயே தினம் கேட்கவில்லையா? எப்

பெரியோரையும் கேட்டுப்பாருங்கள். பார்த்தனின் பரம குணத்தை. நீர் அவனைப் பயலென்றால் அவனுக்கிருக்கும் வீரத்வம் குன்றிவிடுமோ? மஹான்களினாசீர்வாதமெல்லாமவனுக்கு அளவிறந்திருக்கிறது.

நான் மரியாதையின்றிப் பேசுவதை மன்னிப்பீர். என்னை இப்படித் தூஷித்தால் பொறுப்பேன். என் நண்பனை, என்பக்தனை, சுத்த வீரனைப் பலர்முன் இகழ்ந்ததே என் கோபாக்கினிக்குக் காரணம். அது அவனைப்போன்ற வீரனை இகழ்ந்ததாகும், தெய்வத்தையே யிகழ்ந்ததாகும். மரியாதையோடு இம்மட்டும்பேசி நிறுத்தினேன்.

பலரா:—சு! கிருஷ்ணா! என்னடா சத்தம் போடுகிறாய். அவன் வில்லாதி வில்லனாயினு மென்ன? அவனுக் கெத்தனைமனைவியர்எண்ணினையா? அதைப்பற்றிப் பழமொழியும் வழங்குகிறதே. அவன்பல பெண்ஜாதிக்காரன். ஒரு பெண்ணையே திருப்திசெய்வதுகடினமாயிருக்கிறது. இரு பெண்ஜாதிக்காரன் வீட்டில், சூரியன் வரத்தவறினாலும், சண்டைவரத் தவறுவதில்லை. பல பெண்ஜாதிக்காரன் வீட்டி லெப்போதும், பஞ்சாயத்தாகத்தானே யிருக்கும். அப் பஞ்சாயத்துக் கூட்டத்திலா நமதருமைச் சுபத்திரையைக் கொடுப்பது? அருச்சுனனைவிடத் துரியோதனன் மிக்க உயர்ந்தவன், தகுந்தவன். தெரிந்துபேசு,
"சொல்லுக சொல்லிற் பயனுடைய; சொல்லற்க சொல்லிற் பயனிலாச்சொல்"

புரோகிதர்:—பல பெண் ஜாதிக்காரனா? அவ்விஷயத்தில் கிருஷ்ணனுடன் போட்டிபோடவா? இன்னும், சதுர்யுகங்களுக்கில்லை. எண்ணிறந்த கோபியரை ஏககாலத்தில் திருப்தி செய்திருக்கிறார். தனியே மணஞ்

செய்தவர் திட்டமாய்எட்டுப்பேர். அவளைக் காணுவிடில் மனைவிய ரெல்லாம் காணுத கணப்பொழுது யுகப்பொழு தெனக்கிதம் பாடுகின்றனரே. கிருஷ்ணனுடைய அரண் மனையில் தினம் பஞ்சாயத்தா நடக்கிறது? அருச்சுனனும் முகவசீகரமுள்ள கம்பீரமான தீரன். மேலும், க்ஷத்ரியர் பலரை மணப்பது சாஸ்திர சம்மதமே' இப்பொழுதவ னுக்குப் பத்தினியர் மூவரே. அதில் திரௌபதை மகா உத்தமி. அவள் நாமம் ஸ்மரணேன பாபஹரணம்.

கிருஷ்:—மேலும், எனக்கெப்படி உருக்குமணியோ அப்படியே சுபத்திரை பார்த்தனுக்குப் பட்டமகிஷி யாவாள்.

பலரா:—எப்படி யிருப்பினும், நான்காந்தாரமா யவளைக் கொடுக்க எனக்கு மனமில்லை. மேலும், அவனே பர தேசி. இப்பொழுதெங்கே யிருக்கிறானே, எந்தப் பெண்ணைக் கவரச் சூழ்ச்சி செய்துகொண்டிருக்கிறானே. அப்பா கிருஷ்ணு! அவனைவிட்டு வேறிடங்களைப்பார்.

கிருஷ்:—நமது தோட்டத்திலிருக்கும் யதீஸ்வரரைக் கேட் டால் அவரிருக்குமிடத்தை, ஞானதிருஷ்டியாலறிந்து, ஒருநொடியில் சொல்லிவிடுவார். அன்றவர் சுபத்தி ரையை யாசீர்வதித்ததைக் கேட்டிருந்தால் தாங்களிப் படிச் சொல்லமாட்டீர்கள்.

பலரா:—அவர்காதி லிதையெல்லாம் போடாதே. ஏதேனும் நமக்கு விரோதமாய்ச் சொல்லிவிடுவார். அவர் சாது. எப்போதும் சமாதியிலே யாழ்ந்தி யிருப்பார். இரண்டு நாளா யாகாரங்கூடக் கிடையாது.

கிருஷ்:—அவருடைய இடதுகாது லோக விவகாரங்களையும், வலதுகாது வேதகானத்தையுங் கேட்கும். அவர் சகஸ் ராவதானி. அவரே நமது காரியத்தைச் சித்தி செய்பவர்.

புலரா:—முடிவாக, அம்மா, நீ சொல்வதே யுக்தம். நாளையே சுயம்வரக் கொடியை நடுவோம். அநேகமாய், துரியோதனனே யடைவானென்று தோன்றுகிறது. ஆயினும், அரசரெல்லாருக்கு மின்றே அழைப்புச் சீட்டனுப்புகிறேன்.

கிருஷ்:—முதலில் சகுனிக்கும், துரியோதன மஹாராஜனுக்கும், சுயம்வர அழைப்புப் பத்திரிக்கை யனுப்புங்கள். காரியம் கைகூடும்.

பலரா:—அம்மா, என்ன, சொல்லு, பேசாதிருக்கிறாயே. கிருஷ்ணா நீ வாயை மூடு.

கிருஷ்:—அம்மா, நீ ஞாயத்தைச் சொல்லு.

தேவகி:—கிருஷ்ணன் சொல்லுவதே யுக்தமெனத் தோன்றுகிறது. எனக்குப் பிடித்தவன் பார்த்தனே. குழந்தையும் அவன் பெயரைச் சொன்னால் நாணித் தலைகுனிகிறாள். நேற்றிரவு அவன் படத்தையே வைத்துப் பாடிக்கொண்டிருந்தாள். நான் போனதும் படுக்கையடியி லொளித்துவிட்டாள். ஆதலின் அவனே அவளுக்கமைந்தவன்.

பலரா:—அப்படியானால், காரியத்தைப் பலமாய் நடத்துங்கள். முடிந்தால் முகூர்த்தம் நடக்கட்டும். பந்து ஜனங்கள் தானே முகூர்த்தத்திற்குக் கால்கள். உபாத்தியாயரே, என்று தினம் பார்த்திருக்கிறது?

புரோ:—பிள்ளையாண்டான் நக்ஷத்திரத்திற்கும் பெண் நக்ஷத்திரத்திற்கும், பொருந்தியிருக்கிறது. உத்தராயணம், வைகாசி மாதம், சுக்லபக்ஷம் ஹஸ்த நக்ஷத்திரம், த்ரிதியை திதி, மகரலக்னம்-பேஷ் - இரவு - பேஷ் முகூர்த்தம். இதைவிட்டால், இன்னும், இரண்டுவருஷத்திற

கில்லை. சரி திருவிழாவன்று இரவு எட்டரைமணிக்குச் சரியான முகூர்த்தம் ஹஸ்த நக்ஷத்திரம்.

பலரா:—சரி, முகூர்த்தம் நடப்பதைப்பார்ப்போம். எத்தனை வருஷமானாலும் நம் சுபத்திரையை இப்பார்த்தனுக்குக் கொடுப்பதில்லை. நமது வாசுகி கூடத்தான் வில்லுக்கம்பு தெரிவிக்கிறான். அடே வாசுகீ!

வாசுகி:—மகராஜ்!

பலரா:—இவ்வருஷம், திருவிழாவிற்கு ஊர்முழுதும் திரளாய்ப் புறப்படவேண்டியது. இவ் விஷயத்தை நாம் சொன்னதாக வள்ளுவர் பறைசாற்றட்டும். நமது சுபத்திரைக்கு உடம்பு அசௌகரியமாயிருப்பதால் இப்பொழுதெல்லாம் முகூர்த்தமில்லையென்றறிவி. போ சீக்கிரம் இன்னும் நான்கு நாட்களில் எல்லாரும் புறப்படவேண்டியது.

வாசுகி:—உத்தரவு, மகராஜ்! [போகிறான்]

பலரா:—ஊராரும், உறவினரும், கப்பலேறித் தீவிற்குத் திருவிழாப்பார்க்கப் போய்விடுவோம். உற்சவம் முடிந்தபிறகே திரும்புவோம். இனிமேல் பரதேசம் போயிருக்கும் பார்த்தனை எதிர்க்கொண்டழைத்துத் தனியே யிருந்துகொண்டு, முடிந்தவர்கள் மணமுடிக்கட்டும், பார்ப்போம். [நிஷ்க்ரமித்தல்]

கிருஷ்:—பேஷாய்ப் பாருங்கள்! அண்ணாபக்கம் ஜயமானால் கற்கண்டில் எனக்கும் பங்குண்டன்றோ?

தேவகி:—கிருஷ்ணா, அவன் தெரியாது சொல்லுகிறான். ஊர் முழுது மவனோடு திருவிழாவிற்குப் போகட்டும். நாமும் கூடப்போய் முகூர்த்தத்தன்று தயாராய் வந்து, ரகசிய

மாய், காரியத்தை முடித்துவிடுவோம். நல்லதுதான். அவனிருந்தா லேதாவது கலகஞ்செய்வான். உபாத்தி யாயர் கைவசமிருக்கிறார். நீ மாப்பிள்ளையை வரவழை த்துவிடு.

உருக்:—மாமீ! இப்பொழுது வேண்டுமெனினும் அவர் தயார் தான். சாமியாரைமட்டும் கைவசம் வைத்துக்கொண் டால் அருச்சுனனைத் தேடவேண்டாம். உடனே ஞான திருஷ்டியால் பார்த்து வரவழைத்து விடுவார்.

கிருஷ்:—அவருடைய அபார சக்திகளில் இதுவொன்று.

தேவகி:—என்னவோ, நீதான் முகூர்த்தத்தை முடிக்க வேண்டும்.

கிருஷ்—நான் தயார்தான். சுபத்திரையின் சம்மதத்தையும் கேட்டு வருகிறேன். நமக்குப் பிடித்தவன் பெண்ணுக் கும் பிடித்தவனா யிருக்கவேண்டுமன்றோ? அண்ணா வைப்போல் அவளும் என்னைக் கோபித்தால் என்ன செய்வது. சரிநான் போய்வருகிறேன்.

தேவகி:—சரி எல்லோரும் செல்வோம் வாருங்கள்.

(எல்லோரும் நிஷ்க்ரமித்தல்)

---

## அங்கம் III.

### களம். 3.

இடம்:—சுபத்திரையின் அந்தப்புரம். காலம்: மாலை.

[சுபத்திரையும் சாந்தாவும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். கிருஷ்ணன் மெல்ல வருதல்.]

சுபத்:—சாந்தா, அதோ என் அண்ணு வருகிறுர். கலியாண விஷயமா யென்னைக் கிண்டுவார். அதற்கெல்லாம் நீயே பதில் சொல்லிவிடு, ஆகட்டுமா ?

சாந்தா:—ஆகட்டும்.

பிரவேசம்: கிருஷ்ணன்:

வாரும்! இதோ நிற்கிறுள் சுபத்திரை!

கிருஷ்:—என்னம்மா, வாவென்று கூடச் சொல்லலாகாதா? உனக்குநான் கலியாண சமாசாரம் கொண்டுவந்திருக் கிறேன்.

சுபத்:—(தலைகுனிந்து) அண்ணு வாருங்கள்.

சாந்தா:—கலியாணமா ! வாஸ்தவந்தானு ?

கிருஷ்:—அவளையே கேட்டுப்பார்.

சாந்தா:—ஏண்டீ ?

சுபத்:—போடி (வெட்கத்தால் தள்ளுகிறுள்.)

சாந்தா:—கலியாணமென்றுலவளுக்கு வெட்கமாயிருக்கிறதாம்.

கிருஷ்:—உனக்குக் கலியாணமானுல் நீயும் அப்படித்தான் வெட்கப்படுவாய் ! உனக்குந் தீர்மானமாய் விட்டது. உன்னையும் பிடித்துக் கட்டப்போகிறுர்கள். (சாந்தை தலை குனிதல்)

சாந்தா:—சரி, யாரைத் தீர்மானித்திருக்கிறது ?

கிருஷ்:—உனக்கா ? அவளுக்கா ?

சாந்தா:—(வெட்கத்தோடு சுபத்திரை பக்கந்திரும்பி) அவளுக்கு....

கிருஷ்:—இதுவரையில் தெரியாதா ? ஆனுல் அவளுன்னிடஞ் சொல்லவில்லையோ ? [சாந்தாவும், சுபத்திரையும் ஒருவர்முக மொருவர் பார்த்துச் சிரித்தல்]

களவாணிகளா? உங்களுக்குத் தெரியாததா? எனக்கு முன்னேயே உங்களுக்குத் தெரியுமே.

சாந்தா:—யார் என்றால்......

கிருஷ்:—யார், ஒரு பெரிய கிழவனார், உனக்குச் சம்மதந்தானா?

சாந்தா:—போங்கோன்னா! அவளுக்கு யார் என்றால்...

கிருஷ்:—முன்னொருநாள் இரவு தோட்டத்தில் ஹரிகதை செய்தாரோ இல்லையோ, சாமியார் தாத்தா அவருக்குப சாரங்கள் பலமாய் நடக்கிறதோ யில்லையோ? அவர் தாத்தா இல்லையடி! அவருக்கு இப்பொழுதுதான் வயது 25. அவர் தாத்தாவா, மாப்பிள்ளையா வென்பது கலியாணத்தன்று தெரியும். [சுபத்திரை வெளியே செல்கிறாள்]

சாந்தா:—கண்டுபிடித்து விட்டாரடீ!

கிருஷ்:—சாந்தா, நான் சொல்வதை வெளியிடாதே. சந்நியாசியின் சமாசாரத்தை எவ்வளவு கமுக்கமாய் வைத்துக் கொண்டிருக்கிறீர்களோ அப்படியே இதையும் வைத்துக் கொள்ள வேண்டும். நீ, ரொம்ப அடக்கமென்றே உன்னிடஞ் சொல்லுகிறேன்.

சாந்தா:—எல்லாவிஷயமும் இதற்கு முன்னேயே எங்களுக்குத் தெரியும். அவரை நாங்கள் கண்டுபிடித்து விட்டோம் அருச்சுனரென்று.

கிருஷ்:—நீங்கள் கடுத்த கன்னிகளல்லவா! சும்மாவா விடுவீர்கள் அந்தயதியை ஊர்திரும்ப......

சாந்தா:—இல்லை, சுபத்திரையுடன்தான்.

கிருஷ்:—சரி, எல்லாம் தயாராய்விட்டது! முகூர்த்தம் நிச்சயம். இது விஷயத்தில் ரகசியமவசியம். ஆதலால்தெரியுமா?

சாந்தா:—அனைத்துந் தெரியும். நானும் வேண்டியதைத் தயாரித்துவிடுகிறேன்.

கிருஷ்:—அவளிடமும் சொல்லிவிடு. நான் போய்வருகிறேன்.
[நிஷ்கிரமித்தல்]

பிரவேசம்: சுபத்திரை.

சாந்தா:—போய் விட்டாரடீ! இனிவரலாம். திருவிழாவன்று இரவு 8½-மணிக்கு........

சுபத்:—எல்லாந் தெரியும்! தலைபின்னிக் கொள்ளப் போவோம் வா. [நிஷ்க்ரமித்தல்]

---

## அங்கம் III.

### களம் 4.

இடம்: பன்ன சாலை. காலம்: இரவு.

அருச்:—அப்பா, மனதிலிருந்த ஒரு பெருங் கவலை நீங்கியது. ஒரு பெருங்கல் நீங்கியதென்றே சொல்லலாம். தியானமெல்லாங் கடந்து அகமகிழ்ந்திருக்கிறது. மனம் மங்களம் பாடுகிறது. பழைய விஜயனே நான் இப்பொழுது பழைய சூரத்வம் திரும்பியது. காண்டீபத்தை உபயோகிக்கும் சக்தி வந்துவிட்டது.

சரி, பலராமர் என்னை தூஷிப்பதை நோக்குங்கால், நமது காண்டீபத்திற்குச் சிறிது வேலை கொடுக்கவேண்டுமென்றே தோன்றுகிறது. விட்டேனா அவரை. முகூர்த்தம் முடியட்டும். அவரும் நம்மை எதிர்க்கட்டும். காண்டீபமும் நமது மகிமையைக் காட்டட்டும். அவர் திருவிழாவிற்குப் போய் நாள் நான்காகின்றது. முகூர்த்தம் நெருங்கிவிட்டது. அவர் வந்து சுயம்வரக் கொடியை நாட்டும்போது சுபத்திரை பட்டமகிஷியாய் என் பக்கத்திலிருப்பாள். பிறகு வேண்டுமென்றாலும் இந்தப் பயலுக்குக் கொடுக்காமல் வேறெங்கேயாவது பார்த்துக் கொடுக்கட்டும்.

கடிமணத்திற்காக இன்னும் ஒரு நாள் காக்க வேண்டி யிருக்கிறது. ஒருநாள்—அடா—எவ்வளவு காலம். எனிந்த நிமிஷமே கூடாது. எனதாசையை ஏன் அவ்வளவு காலம் காக்க வைக்கவேண்டும்? ஒருநாள்—அதற்குள் இம்மதன் என் பாணங்களுக்குப் பலமில்லாமல் செய்கிறானே. அவனை வெல்லவேண்டுமென்று பாணம் விட்டால் அது என் நெஞ்சி லேயே வந்து தாக்குகிறதே! இவன் இந்திர சித்தைப்போல் மறைந்திருந்து போர்புரிகிறான். வீரனானால் நேரே வரமாட் டானா? பழைய வீரத்வம் திரும்பியது. மன்மதா, முன் வந்து நில் உன் சக்தியைப் பார்ப்போம்.

பிரவேசம்: சுபத்திரை.

சரி, வந்துவிட்டாள். உன்னை வெல்ல என் துணைவி வந்துவிட் டாள்.

[சுபத்திரை பழம் சமர்ப்பித்துத் தனியே நிற்கிறாள்]

கண்ணே! சுபத்ரா! மனோரஞ்சனி! என்ன, பேசா திருக்கிறாய். ஒரு முத்தங் கொடாயோ! கண்ணே! நீ [சுபத் திரை தள்ளிப் போகிறாள்] தள்ளத்தள்ள இச்சரீரமில்லாத வன் மனோவேகத்தோடு என்னைத் தாக்குகிறான். கடல் போல் கரையற்ற காதலால் வருந்துகிறேன்.

(அனுபந்தம் 17

சுபத்:—(அனுபந்தம் 18) கடிமணம் புரியும்நாள் சமீபித்து விட்டது. காந்தர்வஞ் செய்வானேன்.

அருச்:—கண்ணே! காந்தர்வ விவாகம் க்ஷத்ரியருக்குரியதே யாயினும் உன் சம்மதிக்கு விரோதமாய் நடக்க எனக் குப் பிரியமில்லை. உன் மனவருத்தம் என்னை மிக வரு த்தும்.

சுபத்:—வருத்தமில்லை, மன்னா.

(அநுபந்தம் 19)

அருச்:— கண்ணே! நீயும் ஒருநாள் பொறுக்கவேண்டும். நான் கோரியதை நீ கொடாதிருப்பது ஞாயமோ? [பின்னால் சாந்தா கூவுகிறாள்]

சாந்தா;—சுபத்ரா! நாழிகையாய் விட்டது!

அருச்:— கண்ணே! போய்வா! சாந்தா வா! நாராயண! நாராயண! [சுபத்திரை நிஷ்கிரமித்தல். திரை விழுதல்]

---

## அங்கம் IV

### களம் (1)

இடம்: கடலோரம்: காலம்: அஸ்தமனம்:

பிரவேசம்: வாசுகி, சிட்டு

[சுமந்துவந்த மூட்டைகளைக் கீழிறக்கி]

சிட்டு:—என்னடா, திருவிழாவை விட்டு விட்டா! ஆத்தாடி! இன்னக்கிக் கொட்டுமுளக்கைப் பார்க்காமலா! பிச்சையுடைய பாரதிக்கும்மி கேட்காதையா! இன்னெக்கிச் சாமி கும்பிடாதையா! இன்னெக்கி மைலவாகன மூண்டாங்கடா!

வாசுகி:—இல்லே, வெள்ளிக்காளே.

சிட்டு:—இல்லே இடப மூண்டாங்கடா. தீபட்டிக, மத்தாப்புக, வாணங்க, கொட்டுக, முளக்குக, முளக்கொட்டுக, பசனெ, கீதங்க, ஆமடா, இன்னக்கி நம்ம கொட்டு முளக்கில்லடா!

வாசுகி:—ஏண்டா, இன்னமும் போகலேண்டா, மகராசா வந்தாப் போச்சு! என்னடா சங்கதிதெரியாமெப் பேசுறாய். பட்டுச்சேலெ, தங்கப்பாத்திரங்க, லேஞ்சிக, இன்னும் என்னன்னமோ எல்லாம் எதுக்குண்டா நீ?

சிட்டு:—நீதான் சொல்லேலே என்னாத்துக்கு ?

வாசுகி:—இப்பொச் சொல்லக்கூடாது. பெரிய மகராசா காதிலே பட்டாப்போச்சு. கப்பலேறி அக்கரை போகவும் சொல்லுறேன். சரி, ராசாவந்தா ரெண்டுபேரையுந் தண்டிப்பார், புறப்படு.

சிட்டு:—அடபோடா ! இன்னைக்கிக் கொட்டு முளக்கு பலே சோக்கு ! கோடிகட்டி, சருகுபோட்டு, சந்தனம் பூசி, மருவச்சு, மல்லிகை முடிச்சு, பொட்டு வச்சு, முண்டாசு கட்டி, சொகுசா, அப்படி ஒரு ஆட்டம் போட்டாவில்லெடா தெரியும்.

[ஆடுகிறான்]

(அனுபந்தம் 20)

வாசுகி:—அடெ ! கொட்டுக்கு நல்ல வருதுடா! எனக்கு மிருக்கவேண்டு மிண்டுதான். ஆனால் இதைவிட அங்கே பலே சோக்கு! ஆகா! நினைச்சாக்கூட ஆடத்தோணுது! அங்கேயும் அம்மாக்க முளக்கொட்டு நல்லாயிருக்கும். ஆனால் நம்மெச் சேக்கமாட்டாங்க! நம்ம பாட்டைப் படிக்கமாட்டாங்க ! சரி, புறப்படடா ! கப்பல் தயாராயிருக்கு. முன்னே இரண்டு கப்பல்—மொக்கெ— அதிலே, சாமிமாருக, பொம்ளெங்க, அம்மாக்க, எல்லாரும் போராங்க. நம்ம நாயனப் பொன்னுச்சாமியும் அங்கேதாண்டா போராரு.

சிட்டு:—அடே ! சோக்கு ! அப்பண்டாவாரேன் ! அங்கேயென்ன சொன்னாத்தான்.

(அனுபந்தம் 21)

வாசுகி:—அங்கே நம்ப சுபத்திரையம்மாளுக்குக் கலியாணமுடா ! நமக்கெல்லாம் கோடி கொடுப்பாங்க ! பலே

சோக்கு! அருச்சுனர்தான் மாப்பிள்ளை! அவரைப்பார்க்க வாச்சும் போகவேண்டாமாடா?

சிட்டு:—ஏமவுசு! அப்போதே சொல்லியிருந்தால் அக்கரைக்குப் போய் ஒரு ஆட்டம் போட்டிருப்பேனே. ஒண்ணுமில்லாட்டி போனாலும் அருச்சுன மகராசாவைப் பாக்க வாச்சும் போகணுமுடா ஓடடா! சோக்குமேலே சோக்கூ ஊள ஊள! [ஓடுகிறார்கள்].

பிரவேசம் கிருஷ்ணன்: உருக்குமணி:

அடே வாசுகீ! [வாசுகி வருகிறான்] என்ன இவ்வளவு தாமதம். ஓடிப்போய் கப்பலை விரைவாய் நடத்தச்சொல் மணி எட்டிற்கெல்லாம் அக்கரைபோய்ச் சேரவேண்டும். இப்பொழுது மணி 7 போ சீக்கிரம்.

வாசுகி:—உத்தரவு மகராஜா [ஓடுகிறான்]

உருக்:—நாதா, நம்மைச் சேர்ந்தவர்களொருவரும் வரவில்லையே.

கிருஷ்:—அண்ணா சந்தேகிக்காதபடி அவர்களையெல்லாம் நிறுத்திவிட்டு வந்திருக்கிறேன். கலியாணத்திற்கு, மாப்பிள்ளை, பெண், புரோகிதர், அந்தணர், இவர்கள் தானே முக்கியஸ்தர்கள். தாரைவார்க்கத் தாயாருக்குச் சமமாகிய நீ யிருக்கிறாய். மற்றைய காரியங்களுக்கு யானிருக்கிறேன்.

எங்கண்ணாவிற்குத் திருவிழாவில் நிரம்பக் கொண்டாட்டம். அதை விட்டரை மன தோடு ஏனவர் வரவேண்டும்? இங்கே நேத்ரானந்தம் கண்ணைப் பறிக்கிறது. மனக்குதூகலம் மாறாதிருக்கிறது. இதைவிட்டு வருவாரா? அங்கே ஆடம்பரம் அதிகமாய்க் கூடாது. காரியம் முடிந்தபின் களி கூறுவோம்.

உருக் :—நாதா ! தாங்கள் எக்காரியத்திற் புகுந் தாலும், அதை முடிக்காமல் விடுவதில்லை. முடிவும் வேடிக்கை யாகத் தானிருக்கும்.

கிருஷ் :—வேடிக்கை இப்பொழுதா தெரியும். எங்கண்ணு காதில்லைபட்டு, அவர் சீறும் போதன்றே தெரியும், சரி, கப்பலேறுவோம், வா.

(நிஷ்க்ரமித்தல்)

---

## அங்கம் IV

### களம் 2.

இடம்: கலியாண மண்டபம் காலம்: இரவு $8\frac{1}{2}$-மணி.

[அருச்சுனன், கிரீடம், தோள்வளை, ஆரம், பீதாம்பரம் துலங்க சுபத்திரை கையைப்பிடித்து நிற்கிறான். புரோகிதர் அக்னிவளர்த்து, ஹோமஞ் செய்கிறார். வாத்தியங்கள் முழங் குகின்றன. அக்கினியையு மந்தணரையும் வலம் வந்து வதுவரன்கள் நிற்கிறார்கள். கிருஷ்ணன் சுபத்திரை சமீபத் தில் நிற்கிறான்]

[அந்தணர் " ததாஸ்து என்றிடை யிடையே சொல்லுகிறார்கள்."]

கிருஷ் :—தேஜஸ் வியான அருச்சுனா !
ஜெயமாதிலங்கும் சீர் பெறுமார்ப !
நேயமா யிருவரும் நீடூழி வாழ்க !
செந்தாமரைவளர் தேவியை யனைய
சுந்தரி சுபத்திரையைச் சொந்தமாய்க் கொள்க !
சகஞ்சுகம் பெறற்குன் சந்தோடத்திற்
சகமகிழ்ந்தவளை யன்புடனீந்தோம்.

கத்தனே நீயுமென் கன்னி தனக்கு
நித்தமுமே நீ நினைபணி செய்வளே.
சுகதுக்கஞ் சமந்தோய்ந்து துகளிலாச்!
சகடையையன்னசம் சார நடத்துவீர்
உடுக்கை யிழந்தவன் உறுகரம் போலவள்
இடுக்கண் களைவதுன் இனியநற்கடமையே!
மனக்குறைவின்றி மங்களமாகத்
தனக்குவை செறிந்து தரணி யாண்டிருப்பீர்!
குறைவறவாழ்க! குலநற்களிப்புடன்
நிறைநிதியாயுள் நிவந்துயர் மக்களோ
டெல்லோர் தமக்கு மிதஞ்செய உடைந்து
நல்லோர்க்கீந்து நலம்பெற வாழீ!

அந்தணர் :—ததாஸ்து! சுபமஸ்து! (அக்ஷதை போடுதல்).

புரோகிதர் :—என்தாமதம்! ஹஸ்த நக்ஷத்திரம் உதயமாய் விட்டது. மாங்கல்ப தாரணஞ் செய்யலாம்.

அருச் :—(அக்னியை வலம்வந்து).

எங்கள் மனைக்கோ ரிலக்குமி போல்வாள்
மங்களமாகவே மகிழ்ந்தவள் வாழ்வாள்!
மரியாதையுடன் வாழ்ந்தன் பால்மனம்
பரிவாய்ப் பேணிப் பலன் பெறுவேனே!
பாத்திய மெனக்கவள் பான்மையுஞ் சிறுமையும்
எத்திசை புக்கினு மெனை விட்டகலாள்.
எக்கணமும் எவ்விடமும் கைவிடேன்
அக்கினி சாக்ஷியா யறைந்தனனேனே!
அனைவரும் அந்தணர் அமலமா முனிவர்முன்
மனைவியாய்க் கொண்டனன் மணந்தனன் மகிழ!

[மாங்கல்யதாரணஞ் செய்கிறான்].

அந்தணர் :—மங்களானி பவந்து! தீர்க்காயுஷ் மான்பவதி! தீர்க்க சுமங்கலீபவ! [தம்பதிகள் நமஸ்கரிக்கிறார்கள். பெண்கள் ஆனந்தம் பாடுகிறார்கள். பிறகு அம்மிமிதித்தல்].

(அருந்ததி பார்த்தல்)

புரோகிதர்:—சுபத்ரா! அதோ இலகும் அருந்ததியைப்பார்! தன் கணவன் வசிஷ்டனுடைய பணிவிடைகளிலேயே மகிழ்ச்சியடையு முத்தமியன்றோ அவள். தம்பதிகாள்! அவளை நமஸ்கரியுங்கள்.

அருச்:—கண்ணே வசிஷ்டரையும் அருந்ததியையும் போல் ஒத்து வாழும்படி நமக்கீசனருளுவாராக!

[நமஸ்கரித்தல்]

புரோ :—சுபத்ரா! அருந்ததி போன்று உன் நாயகனுடன் மனமொத்தொழுகி, மங்களமாய், மகதைஸ்வர்யங்களை யடைந்து, நீடூழிவாழ்க!

அந்தணர்:—சர்வேஸ்வரனுடைய கிருபையால் மங்களமாய் நீடூழிவாழ்வீர்! தம்பதிகாள்!

புரோகி :—சரி, தம்பதிகளைப் பள்ளியறைக் கழைத்துச் செல்லுங்கள்! மேளம்! மேளம்!

[எல்லாரும் கூடச் செல்கிறார்கள்]

கிருஷ்:—அருச்சுனா! இன்னுமிரண்டு தினங்களுள் சுபத்திரையோடு ஊர்திரும்பு. சுபத்ரா! தயாராகப் புறப்பட்டு விடு.

(இருவரும் தலையை யசைத்துச் செல்கிறார்கள்)

சரி, சிட்டு, வாசுகி! வெற்றிலை, பாக்கு, தட்டுகள், சந்தனம், புஷ்பம், எல்லாம் இங்கே கொண்டுவந்து வையுங்கள் (ஒரு அந்தணரைப் பார்த்து) தயவுசெய்து உங்கள் கையினால்

எல்லோருக்கும் தாம்பூல மளியுங்கள். இதோ பவுன்களடங்கிய இப்பையைத் தக்ஷிணைக் குபயோகியுங்கள். அந்தணஸ்ரேஷ்டர்களெல்லோரு மிருந்து, நாங்கள் செய்யும் மரியாதைகளையும், தான தருமங்களையும், பெற்று, தம்பதிகளை யாசீர்வதித்து, போஜனாலயஞ் செல்லும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். வாசுகி, சிட்டு! நீங்களும் அந்த மூட்டையிலுள்ள கோடி வேஷ்டியைக் கட்டிக்கொண்டு, கலியாணச் சாப்பாடு சாப்பிட்டுவிட்டுச் சந்தோஷமாயிருங்கள்!

(நிஷ்க்ரமித்தல்)

சிட்டு:—அடே! அங்கே யிருக்கவேண்டுமென்று நினைத்தேனே! என்ன முட்டாள்தனம்! கொடுத்து வச்சில்லடா இந்தக் கோடியும், கலியாணச் சாப்பாடும், கூளுச் சந்தனமும் (முகர்ந்து)-அட! சவ்வாது மணக்குதுடா. இந்தத் துளுரு வெற்றிலேயும் கிடைக்கும்! அப்ப! அங்கேயிருந்தா இதைக் கேட்டவுடனே மூஞ்சிவீங்கிச் செத்துப்போவேன்!

வாசுகி:—அட! காரியத்தைப் பாரடா, அப்புறம் பேசுவோம். இன்னும் சத்தெக்குள்ளே அங்கே திருவிழாவுக்குப் போகணும்!

சிட்டு:—அங்கே நாம் போகவும் முளக்கொட்டு ஆரம்பிக்கவும் சரியாயிருக்குமே! மவுசு! மவுசுமேலே மவுசு! சோக்குமேலே சொகுசு.

வாசுகி:—சரி நாம் இதையெல்லாம் சாமிகிட்டக் கொண்டு போய்க் கொடுப்போம் வா.

[போகிறார்கள்]

## அங்கம் IV.

### களம்: 3.

இடம்:—சுபத்திரை யினந்தப்புரம். காலம்: இரவு.

அருச்:—சகி! இப்பொழுது இந்திரபோகம் போன்ற சந்தோஷத்தை யடைந்தோம். ஆனால், அதை நிலை நிறுத்த இடையூறுகளநேக மிருக்கின்றன. சமாசாரங் கேட்டவுடனே பலராமர் அரவமெனச் சீறிக்குதிப்பார்! நாகத்தின் சீற்றமெல்லாம் என்னிடமா? பார்க்கிறேனொருகை. அதி வீரனுடனும் கை கலக்க வேண்டியது தான். எதற்கும் உத்தேசித்தபடி இப்பொழுதே புறப்படுவோம்.

சுபத்:—நாதா! என் இஷ்டமும் அப்படியே யிருக்கிறது நான் இத்துணைநாள் எண்ணியதும் நிறைவேறும்.

அருச்:—அதுதான், நமதிருவ ரெண்ணமும் நிறைவேறிற்றே. இன்னுமென்ன கண்ணே, சொல்.

சுபத்:—நாதா! சாரத்யத்தில் அண்ணா எனக்குப் பூர்ணவித்தையையும் கற்பித்திருக்கிறார். அதை ப்ரயோகஞ் செய்ய நெடுநாள் சமயம் பார்த்துக்கொண்டிருந்தேன். மகாபராக்ரமமுள்ள தமக்கு யுத்தத்தில் சாரதியாயிருந்து என் சாமர்த்தியங்களை, உபயோகப்படுத்த வேண்டுமென்பதே எனதெண்ணம். அதை யிப்பொழுது பூர்த்தி செய்யலாமென்று நினைக்கிறேன்.

அருச்:—அப்படியா! மிகவும் சந்தோஷம்! உனதிஷ்டப் படியே செய்வாய் கண்ணே!

சுபத்:—எல்லாவற்றையும் தயாராய்த் தேர்மேலேற்றி விட்டேன். சகல ஆயுதங்களும் சித்தமாயிருக்கின்றன. புறப்பட வேண்டியது தான் தாமதம்.

அருச் :—பெண் டன்மையை விட்டு, எந்தச் சத்துருவரினும் பயப்படாது, தேரைச் செலுத்த வேண்டும்.

சுபத் :—தாங்க ளருகிலிருக்கப் பயமென்னை யணுகுமா?

அருச் :—நான் காஷாயம் தரித்துக் கொள்ளுகிறேன். பிறகு போவோம், வா,

[நிஷ்க்ரமித்தல்.]

---

## அங்கம் V.

### களம் (1)

இடம்: யுத்தகளம் காலம்: இரவு.

[யுத்த பேரிகை முழங்குகிறது. யத வீரரெல்லாம் ஓடுகிறார்கள்]

அதிவீரன் :—தனுசுகளில் அக்னியாஸ்திரங்களைத் தொடுத்து விடுங்கள்! வில்லை வளைத்து நாணேற்றிக் கூரிய அம்புகளை யிணைத்து விடாமல் பிரயோகியுங்கள்! ஈட்டிகள், சூலங்கள், குண்டாந்தடிகளைச் சுழற்றி வீசுமின்! கஜதுரக வீரரெல்லாம விரைந்து சென்று தாக்குங்கள்.

[சங்கத்வனி கேட்கிறது]

பிரவேசம்: ஒரு வீரன்.

வீரன்: —ஐயோ! கொண்டே போய்விட்டான்! யானைகள் குதிரைகளெல்லாம், வீறிட்டோடுகின்றன! வீரரெல்லாம் பதைபதைத்துப் புறங்காட்டி யோடுகின்றனர். நான் தப்பியது தெய்வபலந்தான். எனக்கும் மார்பில் அம்பு தைத்திருக்கிறது. [சேனைகள் ஓடும் சப்தம் கேட்கிறது] ஆ! என்ன யுத்தஞ் செய்கிறான்! அவனை எதிர்க்க நாம் வல்லேமில்லேம்! தேரோவாயு வேகத்

தோடு செல்லுகிறது! ஒரு பாணம் ஸஹஸ்ரமாய்ப் பிரிந்து பரவுகிறது! வில்வித்தையில் விஜயனைப்போல் திறமை வாய்ந்திருக்கிறான்.

பிரவேசம்: மற்றொருவீரன்:

மற்றொரு வீரன்:—முடியாது! முடியாது! கொண்டே போய் விட்டான்.

அதிவீரன்:—கொண்டுபோய் விட்டானா நம் சுபத்திரையை? என்னடா நமதரண்மனையிற் புகுந்து பெண் திருடிப் போகிறானந்தச் சாமியார்? அவனுடைய தவமகிமையை யெல்லாம், பெண்திருடுவதிலும், யுத்தத்திலும் காட்டி விட்டான். யது வீரர்காள்! நமது கடமையினும் உயிர் பெரிதல்ல. கடமையைக் கைவிடேல்! யுத்ததருமத்தை யொட்டி யொழுகுமின்! நாம் யதுவீரரில்லையா? பாரதச் சிங்கங்களில்லையா? சுபத்திரையை மீட்காவிடின் நமது நாட்டிற்கோர் சிறுமை யேற்படும். அவளை மீட்டு, அவனைத் தண்டிப்பதில், நமதுயிர் போனால், அதுவே நமக்கு நற்கெதி நல்கும்; வீரசொர்க்கந்தரும் வருவீர்! வீரர்காள்!

வீரா:—உண்மைக்குழைத்துயிர் விடுவோம், வம்மின் உத்தமரே!

ஒருவீரன்:—இவன் தோட்டத்திலிருந்த சாமியாராம். அப்பொழுதே யவனை நான் சந்தேகித்தேன். இப்படிப் பெண்திருடி வெள்ளை வேட்டிச்சாமி யென்றறிந்திருந்தால் அப்பொழுதே ஒருகை பார்த்திருப்பேன்.

அவ்வீரன்:—நமது சேனைகளெங்கே யிருக்கின்றன? [illegible]தரு எவ்வளவுதூரம் சென்றிருப்பான்?

ஒருவீரன் [ஓடிவந்து] ஐயோ! நூறுமைல் போய்விட்டான்! தேரோ கருடனும் காற்றும் தோற்றுப்போகும்படி யோடுகிறது! தொடாமுடியாது!

அதிவீரன் :—இவனை வெல்லாவிடின் நாம் வீரரென்ற தகைமைசேர் பட்டத்திற்குத் தகுந்தவர்களல்ல. இத்தனை பேருஞ் சேர்ந்து ஒருவனை யெதிர்க்க அசக்தர்களாயின் என்னே நமது வன்மை! புறப்படுங்கள்!

[பேரிகை முழக்கம்]

அனுபந்தம் 22.

எல்லாரும் வந்துவிட்டார்கள் தீவினின்று!

பிரவேசம்: பலராமர், கிருஷ்ணன் முதலியோர்.

பலரா :—நில்லுங்கள்! நில்லுங்கள்! சத்ருயார்?

அதிவீரன் :—சாமியார் நமது சுபத்திரையைத் தேர்மேலேற்றிச் செல்லுகிறார். நமது சேனைகளெல்லாம் பின் தொடர்ந்து செல்லுகின்றன. சாமியார் எல்லாவற்றையும் முறியடிக்கிறார்.

பலரா :—இதற்குத்தானா உங்களை ஊர்க்காவலுக்கு வைத்திருப்பது? நீங்கள் வீரர்களா! இன்றேயுங்களுருப் பத்தையறுத் தெறியுங்கள்! தலைமயிரைத் தறியுங்கள்! வில்லை ஒடித்தெறிந்து வீரரெனும் பட்டத்தை விட்டு விடுங்கள்! ஒருவனை யெதிர்க்க அசக்தர்களானோர் நீங்கள் வீரர்களா?

அதிவீரன் :—மகராஜ்! இதோ சென்று எங்களுயிரைக் கொடுத்து, அவன் எவ்வுலகி லிருப்பினும் தொடர்ந்து தம் முன் கொண்டு வருகிறோம். எங்களாண்மையின் மேலாணையாகச் செல்லுகிறோம்! இதோ புறப்படுகிறோம். வீரர்காள்! வாளையுயர்த்தி வலப்புறந்திரும்பி வடக்கே விரைமின்!

கிருஷ் :—(எல்லோரையும் கைகாட்டி) அவஸ்யமில்லை. பொறுங்கள் !

பலரா :—கிருஷ்ணு !

கிருஷ் :—அண்ணு !

பலரா :—சந்நியாசி யாவதடா ? உனக்கவனுடைய கதை முழுதும் தெரியும், 'பரமசாது, என்றப் பெண் திருடியை வசிஷ்டருக்குச் சமானமாக ஏத்தி வைத்தாயே. இப்பொழுது அவன் யார் ? சொல் உண்மையை. இக்கணமே சென்று ஒரு கைபார்க்கிறேன். இக்கபட சந்நியாசிகளால் காஷாயத்திற்கே யோரேளன மேற்படும்.

" தவமறைந்தல்லவை செய்தன், புதன்மறைந்து, வேட்டுவன் புட்சிமிழ்த்தற்று" கிருஷ்ணு, என்ன சிரிக்கிருய் ?

கிருஷ் :—அண்ணு நமஸ்காரம். என் மேல் கிருபைவைத்தென்னை மன்னிக்க வேண்டும். கோபம் கூடாது. அன்றே ரேவதியில் சொன்னேனே. காஷாயத்தி லென்ன கல்மிஷ மிருக்குமோ வென்று. தாங்கள், "சந்நியாசியார் பரமசாது. உள்ளும் புறமுமொரே நிர்மலவடிவு" என்று, இருக்கச் சரியான இடமும், ஸுஸ்ரூஷைக்குச் சுபத்திரையையும் கொடுத்தீர். சந்நியாசியார், இப்பொழுது வெளியூருக்குப் போகிறபடியால், சுத்த கன்னிகையாயிற்றே ஸுஸ்ரூஷைக் கிருக்கட்டு மென்று, சுபத்திரையை யழைத்துப் போய் விட்டார். நான் அண்ணுவின் மனங் கோணுது நடந்தேன். நீங்கள் கொடுத்த மரியாதைக்குக் கைம்மாருகச் சந்நியாசியார் அவருடைய பூராத்திருவிளையாடல் களையும் காட்டி விட்டார். இனியவரை யென்ன செய்ய முடியும் ?

பலரா :—செய்ய முடியுமா ? அவனிருக்கும் ஊரை மட்டும் சொல். இதோ அன்று முஷ்டிகனைக் கொன்ற காங்க

ளாலவனையு மொரு கை பார்க்கிறேன். அவன் வாகன மென்ன?

கிருஷ்:—இருப்பது இந்திரப்ரத்தம். வாகனம் ஸ்வேதவா கனம்.

பலரா:—தெரிந்து கொண்டேன், கிருஷ்ணா! இதெல்லாம் உன் சூழ்ச்சியே. உன்னால் நமது வமிசத்திற் கோர் சிறுமை யேற்பட்டது. நீ இப்படி எனக்கே விரோதி யாவா யென்றறியேன். சுயம் வரம் கடி மணம் ஒன்று மின்றி ஒருவன் அதுவும் அவ்வருச்சுனன் திருடிக் கொண்டு போக விடுத் தாயல்லவா. உன் நேசனின் விசுவாசம் நன்று நன்று.

கிருஷ்:—இவ்வளவு கோபமேன்! தாங்கள் யதிகளுக்குக் கொடுத்த மரியாதைதானே இம் மட்டிலாயிற்று. தங் களைப் போன்ற பெரியவர்களாலேயே, நமது குடும்பத் திற்கு, விஜயனை, ஜெயவீரனை, "மாப் பிள்ளை" என்ற ழைக்கும் பெருமை பிறந்தது. எப்படியும் அவன் மாப் பிள்ளையாய் விட்டான். நான் தவறிச் சொல்லியிருக்கும் "பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயந்தனால்" நமது குடும்பத்திற்கு மகத்தான பெரு மையைச் சம்பாதிக்கவே யிவ்வாறு செய்தேன். அக் கினி சாக்ஷியாய், சகல தேவர்கள், ரிஷி கணங்கள் அந் தணர் முன்னும் கடிமணம் சரிவர நடந்தபிறகே விஜ யன் ஊர் திரும்புகிறான். சுபத்திரை தேரோட்டிச் செல்கிறாளே பார்க்கவில்லையா? உருக்குமணியும் நானும் தாரை வார்த்தோம். ஹஸ்த நக்ஷத்திரம் தப்பி விடு மென்று வந்த அவசரத்தில் தங்களை யழைக்க மறந்து விட்டோம். மன்னிக்கவேண்டும். முகூர்த்தத்தன்று,

அந்தணருக் கெல்லாம், பிருஷ்டான்னம், தக்ஷிணை, தானம், எல்லாம் பலமாய்க் கிடைத்தது. வதுவரர் களுக்கும் பெரியோரின் பூர்ண ஆசீர்வாதமுங் கிடைத் தது, அருச்சுனனும் அக்கினி சாக்ஷியாய் நமது மாப் பிள்ளையாய் விட்டான். இனிமேல் கட்டினதாலியை என்ன செய்வது?

பலரா:—கிருஷ்ணா! முன்னே எனப்படிச் சொல்லவில்லை? அருச் சுனனு! இவ்வளவு பலசாலி யென்று எனக்குத் தெரியாது. வேதாந்தம் என்னமாய்ச் சொன்னான்! பயந்து கொண்டேயிருந்தேன், அருச்சுனன் வந்திருக் கிறானென்கிறார்கள், நம்வீட்டில் பெண்ணிருக் கிறதே யென்று. நான் நினைத்தபடியே நடந்தது.

கிருஷ்:—நான் நினைத்தபடியும் நடந்தது. இருதரப்பிலும் ஜயந்தான். ஆதலின், நாமிப்பொழுது சகல சீர்களையு மெடுத்துக்கொண்டு, இந்திரப்ரத்தஞ் சென்று, அவ ரைத்ருப்திசெய்து, சுபத்திரைக்குச் சீர்கொடுத்து, மங் களமா யங்கேயே சிலநாள் தங்கியிருந்து வருவோம், புறப்படுங்கள்.

பலரா:—கிருஷ்ணா, என்ன செய்வேன், கண்டபடி அவனைப் பேசிவிட்டேனே, அவன் பகைவருமோ?

கிருஷ்:—அருச்சுன சந்நியாசியை நீர் அடிவணங்கினதற்கும், காண்டீப அருச்சுனனை முனிந்ததற்கும், சரியாய்ப் போ யிற்று. பகையின்றி பார்த்துக் கொள்பவன் நான். தாங்கள் புறப்படுங்கள்.

சேனாதிபதிகளே! வீரர்களே! யுத்தகோஷத்தைநிறுத் துங்கள். அருச்சுனரை யுங்களா லணுகமுடியாது. அவரை யெதிர்க்கவும் வேண்டுவதில்லை. அவரே நமது மாப்பிள்ளை.

அவருக்கு மரியாதையாய்ச் சீரெடுத்துச் செல்வோம். நீங்களும் சிலரை ஊர்க்காவலுக்கு வைத்துவிட்டு, கஜதுரகபடைகளுடன் புறப்படுங்கள்.

வீரர்:—ஆ! அருச்சுனரா! அப்பொழுதேயறிவோமாயின் சண்டையைநிறுத்தி அவரையடிபணிந்திருப்போமே! இதோவருகிறோம் அருச்சுனரை, எங்கள் ஜெயவீரரைத் தொழ!

கிருஷ்:—சரி எல்லாரும் புறப்படுங்கள்

(மங்களவாத்யம்முழங்குகிறது.)

---

## அங்கம் V.

### களம்: 2.

இடம்: ஒரு நிர் மானுஷ்யமான காடு காலம்: அதிகாலே.

[சுபத்திரை இடைச்சி வேஷத்துடன் நிற்கிறாள்.]

சுபத்திரை:—நாதா! அவர்கள் தான் ஒரு பாணத்தில் பறந்தோடி விட்டார்களே. இனிமேல் காண்டீபம் இளைப்பாறட்டும்.

அருச்:—கண்ணே! உன் சாரத்யத்தை மெச்சினேன். வாகுகனைக்கூட உனக்கிணை சொல்ல முடியாது. கிருஷ்ணனுக்குச் சமமாய்க் கூறலாம். கண்ணே நீ மிகவும் புத்திசாலி.

சுபத்:—நாதா, இருக்கட்டும், என்னை ஏனிப்படி இடைச்சி வேஷம் பூணும்படி சொன்னீர்?

அருச்:—முத்தே! இக்கீழான உடையிலும் நீ ரதியினு மதிகமாய் விளங்குகிறாய். வெளியே யிருப்பது கீழான உடையாயினும் உள்ளேயிருப்பது என் மனதிற்கு வந்த மாணிக்கந்தானே. அம் மாணிக்கத்தினொளி குன்றுமோ?

சுபத்:—நாதா, எதற்காக இவ்வேஷம் ?

அருச்:—கண்ணே ! எல்லாமுன் நன்மைக்கே. நீ முன்னே சென்று, எனதருமைத் திரௌபதையை யடிவணங்கி, "அம்மணீ, உங்கள் பணிவிடைகளைச் செய்யப் பார்த்தன் என்னை யனுப்பினார்" என்றுரை. அவள் உன்னை மனதார வாழ்த்துவாள். பிறகு நாம் சுகித்திருக்கலாம். கண்ணே ! உனக்காக நான் வேஷம் போட்டேன், இத்தரி, எனக்காக நீ வேஷம் போடவேண்டி யிருக்கிறது.

சுபத்:—நாதா ! தாங்கள் சொற்படியே செய்கிறேன். பாஞ்சாலியின் பதம் பணிந்தோர்க்குப் பரமனின் துணையென்று முண்டு, நற்கதி யுண்டு.

அருச்:—கண்ணே நீ மிகவும் புத்திசாலி. தேர்மேலேறுவோம், வா.

(நிஷ்க்ரமித்தல்)

---

## அங்கம் V.

### களம்: 3.

இடம்: திரௌபதை அந்தபுரம் காலம்: மாலை:

திரௌ:—[ஆசனத்திலமர்ந்து] சென்று மாதங்கள் மூன்றாயினவே. என்னைத்தவிக்க விட்டின்னு மெங்கேயோ சுற்றிக்கொண்டிருக்கிறாரே. பிராணேசா ! எத்தனை நாள் தங்கள் திருச்சேவையைக் காணாது என்கண்கள் வருந்தும் ! எத்தனைநாள் தங்கள் கம்பீரமான இனிய வார்த்தைகளுக்காகக் காதுகள் காத்திருக்கும் ? தங்களுடைய கரஸ்பர்சமின்றி என் தோள்களெல்லாம் தளர்ந்தனவே. இன்னும் எத்தனைநாள் காத்திருப்பேன். ஆ கிருஷ்ணா ! நீதானவரை என்னிடம் சேர்ப்பிக்க வேண்டும். உனக்கே அவருடைய மனம் முற்றுந் தெரியும்.

பிரவேசம்: ஒரு இடைச்சி.

யாரம்மா! இப்படிவா.

இடை:—அன்னையே அடிபணிந்தேன். தமதன்பைக் கோரியே வந்தேன். உங்கள் பணிகளைச் செய்யவே என்னைப் பார்த்தன் இங்கனுப்பினார். என்னை யங்கீகரிக்க வேண்டு மன்னையே.

(அனுபந்தம் 23)

திரௌ:—அம்மா! என் மனப்பூர்வமான அன்புனக்குண்டு.
என் காதிற்கினிய வார்த்தைகளைச் சொன்னாய்.
சந்திரவதனீ! என்பாற் சாற்றியதளித்தேன் முற்றும்
சொந்தமாமன்னனோடு சுகமுற வினிது வாழ்வாய்!
அந்தமார் சக்களத்தி யன்பினுக்குரியளாகி
விந்தையாம் வீரர்தம்மை விளங்கவே பெற்று வாழ்க!

பிரவேசம்: அருச்சுனன்.

திரௌ:—நாதா! நமஸ்தே! இப்படி யமருங்கள்!

அருச்:—அரண்மனையிலனைவரும் சௌக்யந்தானே!

இதோ நிற்கும் சுபத்திரையை யுனக்குதவியாகவே மணந்துவந்தேன். உனக்கிது சம்மதந்தானே?

திரௌ:—சுபத்திரையா! அம்மா! அப்பொழுதே சொல்லக் கூடாதா! உடனே போய் நல்ல உடைதரித்துவா.

[சுபத்திரை போகிறாள்]

நாதா! அவள்மேலெனக்கிருக்குமன்பு என்றும் குன்றாது. மகா உத்தமியன்றோ அவள். உமதருகில் திருவென விளங்குவாள்.

பிரவேசம்: பலராமர், கிருஷ்ணன், உருக்குமணி முதலியோர்.

அருச்:—வரவேண்டும்! வரவேண்டும்! பொருள்களை யெல்லாம் இங்கேயே இப்படி யிறக்குங்கள்!

பலரா:—எல்லாம் இங்கேயே யிருக்கவேண்டிய சாமான் களே.

அருச்:—பலராமரே! தங்கள் வரவு நல்வரவாகுக! திரௌபதா! அவரை நமஸ்கரி·

[திரௌபதை பலராமரை நமஸ்கரித்தல்]

பலரா:—தீர்க்க சுமங்கலீபவ! மங்களானி பவந்து!

கிருஷ்:—யதீஸ்வரரே இதெல்லா முங்கள் தபோபலனே

அருச்:—தங்கள் பலத்தாலேயே தபோபலன் வரும்.

[சுபத்திரை பலராமருக்கும் கிருஷ்ணனுக்கும் நமஸ்கரித்து அருச்சுனன் கையைப்பிடித்து நிற்கிருள்]

பலரா:—தீர்க்கசுமங்கலீபவ! பாஞ்சாலீ! இவள் உன் அடைக்கலம். நீதான் பார்த்துக் கொள்ளவேண்டும். சுபத்திரா! திரௌபதைதான் உன் தாயார். அவளிட்டதைச் சட்டமாய்க் கொள்ளவேண்டும்.

சுபத்:—என தன்னையினு மதிகமே அம்மை திரௌபதை.

திரௌ:—சுபத்திரையை யென் வலக்கண்ணெனக் காப்பேன்.

பலரா:—அருச்சுனு! நான் ஏதாவது முன்பின் பேசியிருப்பினும் சரிசரியென்று விட்டுவிடு. உன்னை இப்பொழுதே சிம்மக்குட்டியென் றறிந்தேன்.

அருச்:—தாங்க ளெனக்கீயும் மரியாதைக்காக மனமுவந்த வந்தன மளிக்கிறேன். எல்லாரும் இங்கேயே கொஞ்சநாள் தங்கிப் போகலாம்.

பலரா:—நாங்கள் ஊரைத் தனியேவிட்டு வந்திருப்பதால் நாளையே புறப்படவேண்டும். செய்யவேண்டியவற்றை இன்றே செய்வது உசிதம்.

கிருஷ்:—மாப்பிள்ளை! உனக்கு த்யானபலன் முற்றும் கைகூடியதே, இனிமே லென்னவேண்டும்?

அருச்:—கைகூட்டுவது நீயேதான்.

(அனுபந்தம் 24)

கிருஷ்ணா ! நீ மட்டுமாவது என்னகத் திருக்கவேண்டும்.

**கிருஷ்:—**அன்பரகமே யெனதின்ப அகம்.

யாவருணர்த்தோருமென்னை யெவ்வணமே துதிசெயினு
மந்தவேளை
யாவரெனைக் கரங்கூப்பி யானந்தக் கண்ணீரி
லழுந்தினாலும்
நாவதனில் நனியுரைத்தென் நற்கதையைக்கேட்டு
நலங்கருதிட்டாலும்
யாவருளத்துள்ளதை யக்கணத்தினில் யானீந்தவரை
யாட்கொள்வேனே !

**பலரா:—**சுபத்ரா ! உனதழகிற்கேற்ற அருச்சுனரையே யடைந்தாய் ! மங்களானிபவந்து !

**சுபத்:—**திரௌபதை என்னை ஏற்றுக்கொண்டதே என் பாக்யம் !

நிறைவான வானந்த நீளாயுள் நிலை செல்வம்
நித்யத்வ நிர்விசாரம்
நிகரிலா மதிகதியு நீடுதவு நின்மலீ
நித்யகல்யாணிதாயே !
கரையிலாக் கருணைகடாக்ஷியே ! சாக்ஷியே
கலையே கருத்தி னொளியே !
காரணீ ! பூரணீ ! ஆரணீ ! நாரணீ !
கற்பகத்தருவே நமோ !
புரையிலாவொன்றே ! பொருந்துமோர் போதமே !
போற்றியுன் புகழ்பாடுவேன்
பொறுமையின் உருவே ! யென் போராடு வினைபோக்கி
பொருள் வீடளித்துதவுவாய்

திரையைவிலக்கி நற்றீபத்தி னொளிகாண
திதிக்கவென் மனதில் நிற்பாய்!
சித்தர்தொழுதேத்திடுஞ் சித்தியே! சத்தியே!
சித்தசிரணி யம்பிகே!

எல்லாரும்:— (அனுபந்தம் 25)

பாரதிக் கணிசேர்வீரர் பாங்குடன் புனிதர்வாழி!
சீரதிபடைத்தநாடு சிறந்தநம் மிந்துவாழி!
பேரதிபெற்று நீடு பேசரு பக்திவாழி!
நாரதமுனிவரேத்து நாமமே மனதில்வாழி!
வாழ்க பாரதி! வான்புகழ் ஞானமும்
தாழ்கதாழ்மதி தண்ணரு ளோங்குக!
பாழ்க பாரின் துயர்பிணி பாபங்கள்
சூழ்க நற்சுகந்தூய்மை யறங்களே!

---

சுபம்.

## அனுபந்தம்

### (1)

இராகம்: பியாகு தாளம் ரூபகம்.

பல்லவி:

எங்கும் நிறைந்த வொன்றே - எல்லாமுன்னடிமையே (எங்கு)

அனுபல்லவி

மங்குல் போக்கி மகிழ்ச்சியாக்கும்
மங்களம் மலிந்த சோதீ! (எங்கு)

சரணம்:

தங்குமுன் தகைமைநாமம் தான் துணையதாகவே
பொங்குமுன் புகழைநெஞ்சப் புனிதனகப் பாடுவேனே (எங்கு)

அருச்சுனசந் யாசியென்னு மருமைசரிதை ஜயமொடு
விரிச்சுகம் விழைந்து நாட விஸ்வனே விளங்கருள்வாய் (எங்கு)
முத்தமிழ் முதல்வனை மூர்த்தியே யென்மூலமே
சத்தியீவாய் சர்வலோகா! சயம்பெற வருள்வாய் நாதா (எங்கு)

---

(2)

இராகம் அடாணா　　　　தாளம் ரூபகம்

பல்லவி

பூங்காவனம் புண்ணியனின் மகிமை - சொல்லும்
புகழச் சுகமகிழப் பெருநிழலைத் தரு குழலோதிடு　　(பூ)

அனுபல்லவி

மாம்பூ மகிழ், மனோ ரஞ்சிதம் ரோஜாவும் மல்லிகை முல்லைகளும்
நறுமணமிக்கவேசுணமுய்க்கவேமதுமிக்கவேஇதமெய்த்தரும்

சரணம்

சந்யாசியோகிகள்சந்தோஷமெய்திடும் சதயசாந்திபீடமேவெகு
சமசித்தமு மனசுத்தமு தினமெய்ச்சிவ மகிழ்வைத்தரும் (பூ)
இயற்கைத்தாயின்பொலிவெங்கும்பசேலெனஇன்பமதீந்திடுமேஇந்த
இடத்தினிற் சிவத்தினைத் திடத்துடன் அடுத்திடப்　　(பூ)

---

(3)

இராகம் செஞ்சுருட்டி　　　　தாளம் ரூபகம்

| | | |
|---|---|---|
| வேதியரின் வேதமோங்க | தில்லாலே | நம் |
| நீதிமன்னர் நீடுவாழ்க | தில்லாலே | |
| மாதமும் மாரியாலே | ,, | நம் |
| யாதவர் நாடுதழைக்க | ,, | |
| பசுக்கள் மிகுபால்கரக்க | ,, | நாம் |
| பசியாறிச்சுகித்திருக்க | ,, | |

பாட்டுப்பாடி நாட்டியமாடி தில்லாலே
மாட்டையோட்டி வருவமடி ,,
கண்ணன்க்ருபையிருக்க ,, நம்மைத்
திண்ணமாக ஆதரிப்பார் ,,

---

(4)

இராகம் தன்யாசி தாளம் ஆதி

பல்லவி

என்றன் சிற்றறிவா லெவ்வணமீசனே
இயம்புவேன்நின்செயலே (என்)

அனுபல்லவி.

அந்தமாதி யிலா அருள்நிறை சோதியே
சந்த தமுந்துதி சாற்று மன்பர்க் கருள்வாய் (என்)

சரணம் :

நாரத மாமுனிகள் நாராயண வென்றெந்
நேரமுமுன்னைத் துதிக்கச்
சாரங்கபாணியே சர்வபூமனே யுன்னை
நாராயண வென்று நவிலவே நான் வல்லேன் (என்)

---

(5)

ராகம் எதுகுல காம்போதி தாளம் சாப்பு.

பல்லவி :

பரம சுந்தரிதாயே பலவளங்கள் பெற்றுளும்
பார்தொழும் பாரதியே (பர)

அனுபல்லவி.

பெருமையா யுன்தொண்டு பேர வாவுடன் செய்து
மறுமையிம்மைப்பயன்கள் மகிழ் வுறவடைவேனே (பர)

சரணம்:

கல்வியுஞ் செல்வியுங் கை வெண் சாமரம் போடக்
கான சுரசி பாட
பல்வித மாகத் தொண்டர் பா பொழிந்து கொண்டாட
நல்வி, ஞானமும், நற்கு ணங்களும்
செல் வந்தானம் விசேஷ பக்தியும் (பர)

---

(6)

இராகம் நாட்டைக்குறிஞ்சி தாளம் ஆதி:

பல்லவி:

முரளீதரா முகுந்தா!—மூலமுதலே! (முர)

அநுபல்லவி:

சரணம் சாந்தரூபனே! சகலலோக தீபனே!
கருணைக்குன்றே நின்னைக்கதியென்றேனையனே (முர)

சரணம்.

மனது கவலையற மகிழுமுன் கீதமே
எனது வினையகல ஈவாயுன் போதமே!
உனது ஒருமொழியே உயரென்றன் வேதமே!
இனிது மணிக்கருள்வாய் இறையேயுன்பாதமே! (முர)

---

(7)

இராகம் கேதாரம் தாளம் சாப்பு.

பல்லவி:

வேதமுதலே வேந்தேயுன்தம் பாதமேகதி (வேத)

அநு பல்லவி:

நாத ப்ரம் மத்தை யுன் நாவினில் நாட்டியே
போதகுருவாகிப் போற்றவெனை யருள் (வேத)

சரணம்.

காவிரி போன் றென்றன் காவி யங்கண் ணிருங் [கழலக்கை கூப்பி

கூவியுன்றன் பேர்குருசத்குருவெனக் கூவியும் [வாராயோ !

பாவிநான் பாழ்வினை செய்தவ னென்றாலும் [பக்ஷமாயாற் ருயோ !

ஆவியு நீயே யெனந்தமு நீயென [வாதரவீவா யோ !

கானஞ் செய் தேத்து மனத்தில் வாழ் காட்சியே

காணப் பெரு மானைத்தரு பேணத்தரு [மாட்சியே (வேத)

---

(8)

இராகம் சாவேரி — தாளம் ஆதி.

பல்லவி :

உன்னைக் கொண்டவெனுளம் - உன்றன் துதியை [யென்றும்

உரைத்திட வருள் புரிவாய்

அனு பல்லவி :

அன்னைமீனுக்ஷியே யார் துணை வேறெனக்குத்

தண்ணரு ளீவாய் மாமுக் கண்ணன் துணை [வியே ! (உன்னை)

சரணம் :

பாரிலிணை யில்லாப் பாண்டியன் குமாரியே !

சீருயர் மாமதுரை சிறந்த வரசி நீயே !

காருண்யவடிவே யென் கண் கொளாக்காட்சியே !

கோரியதீவா யென்றன் கோமள வல்லியே !

சக்தி யேசாங் தஸ்வரூபிணியே நாரணி !
எத்திசையும் பரிபூரணி காரணி !
சித்திதரு முன்றன் நாமமென் சீரணி !
பக்தர்க்கனு கூலியே பங்கஜ வாரணி ! (உன்னை)

---

(9)

இராகம் பூரிகல்யாணி தாளம் சாப்பு.

பல்லவி :

பார்த்தனை நாதா வென் றழைக்கும் பாக்கியந்தனைப்
பரிந் தெனக் கீவா யீஸ்வரீ ! (பார்)

அநு பல்லவி.

பார் தனில் விஜயனை பர்த்தாவாக வடைந் தால்
யார்தானெனக்கிணை-அனைத்து முன்றன் கருணை (பார்)

சரணம்.

ஏற்றமா மவர்புக ழெங்கும் - குன்றின்
ஏற்றியவிளக் கென்றிலங்கும் - என்றும்
நாற்றிசையும் நலம் பொங்கும் - அவர்க்
கேற்றதெலாம் வந்து தங்கும் - உன்னைத்
தரிசனஞ் செய்வோரிடந் தரித்திராது குறை வுன்
அரிய பக்தர்க் கெதுவு மாவதும் விரைவு என்
இருதயத்திலுன்கீதம் இன்பமாய் நிறைவு நீ
கருதியளிப்பதும் காப்பதும் துறவு நான் (பார்)

---

(10)

இராகம் பரசு தாளம் ஆதி.

பல்லவி :

மையலா னேனவர் மீதிலே - சத்குருநாதா (மை)

அநு பல்லவி :

மெய்யே யிது வென்றனை யனுறைவிடஞ் சொல்வீர் (மை)

சரணம்:

எங்கு மவர் நாமத்தை இனிமையுடனே கேட்கப்
பொங்கு மென்தாபமே தங்குசேவை காணவே
சகியேனே - இனிச்
சகியேனே
அகிலம்புகழு மென்றன் ஆண்டவரிடஞ் சேர்ப்பாய்(மை)

---

## (11)

இராகம் பரசு தாளம் ஆதி.

பல்லவி:

கண்மணீ யுன்னைநாடியே - கடுகிவந்தார்

அநு பல்லவி.

பெண்மணியே ! செல்வமே !
[பிரியா மையலுடனே (கண்)

சரணம்:

உன்னிடத்தை விட உறைவிட மேதவற்கு
மன்னனையே நீயும் மனதாறவே பூசித்தாய்.
தனஞ் சயனே - நானத்
தனஞ் சயனே - உன்னை
மணக்கவே யதியாகி மாண்மைக்காஷா
[யம் பூண்டேன் (மை)

---

## (12)

இராகம் முகாரி தாளம் சாப்பு.

பல்லவி:

மனதிலிச் சித்த வென்றன் - மன் னனையடைந்தது
எனது பாக்யமே பாக்யம்

அனு பல்லவி:

அனுதினமும் துதித்த ஆசைமணாளனே
மனமுவந்தின் பமிங் கீந்ததென்றன்
[சிலாக்கியம் (மனதி)

சரணம்.

கருதினே னும்மையே கடி மணம்புரியவே
கண் கொளாக் காட்சி நீரே!
பெரியோர் வாழ்த்தின துண்மை ப்ரத்யக்ஷமானதே
அரிய ஆசைமணாளா அடைந்தேனளவிலின்பம் (மனதி)

---

(13)

இராகம் முகாரி தாளம் சாப்பு.

பல்லவி

மனதிலிச் சித்த மணாட்டியை யடைந்தது
மெனது பாக்யமே பாக்யம் (மன)

அனுபல்லவி

தினமுமெனை நினைந்தே திடமாய்த் தொண்டு புரிந்தாய்
கனகமயமே கண்ணே காதலியே நானும் (மன)

சரணம்

அவ்வணமே வுன்மீதி லாசையாகியதியா
யிவ்வணமேகினேனே
எவ்வணமுரைப்பேன்யான் ஏங்கித்தவித்ததை
செல்வியுன்னையடைந்தேன் என்றன்
பாக்யமே பாக்யம் (மன)

---

(14)

ஆனந்தக்களிப்பு:

தொண்டுசெய் தேத்தியதாளே—மனத்
தோற்றமகல விரும்பிய தோளே.
கண்டனன் காண்டீபரன்பு—அந்தக்
காட்சி என்சொல்வேன் கருத்திற் கரும்பு. (தொ)

---

(15)

சந்யாசமேனவர் பூண்டார்—க்ரகச்
சங்கடத்தாலோ மற்றங்கஜனாலோ ?
இங்கவருற்றதன்னாலோ ?—முற்றும்
சங்கையில்லாது நீ சாற்றுவாய் தோழீ (சந்)

---

(16)

(ஆறுமுகவடிவேலவனே என்ற காவடிச்சிந்து மெட்டு)

காதலுற்றென்மீது காஷாயம்பூண்டு
கரந்திவண் வந்தாரடி—அவர்
காமுற்றசந்யாசி யாமென்றறிவை
களிப்பையுந் தந்தாரடி (1)

மையலாகினேனென் றய்யனறிந்தென்
மருங்கினில் நின்றாரே—நின்று
தையலே யுன்னால் பொய்யுருக்கொண்டேன்
தயைபுரியென்றாரே (2)

இப்பிரமானந்த மங்கம்பூரிப்புக்
கினியதோர் சாரணமே—உயர்
ஒப்பிலாமாதவனின் னருளாலெனக்
குற்றது பூரணமே.

(17)

இராகம் நாதநாமக்கிரியை தாளம் சாப்பு.

அளிப்பாயானந்தம்—ஆரணங்கே (அளி)

களித்திருப்போமிந்தக் கணமுதலிருவரும்

காத்திருப்பானேன் கடிமண நாள்வரை

கண்மணியேசொல்.

---

(18)

இராகம் நாதநாமக்கிரியை தாளம் சாப்பு

வீரருள் வீர—விருப்பத்தை

வெல்வதரிதோ

பார்தொழும் வேந்தரும் பாவையரைத்தொழல்

பாங்கிதுவேறு பரிந்து பொறுப்பரே

பார்த்திபரேறே!

---

(19)

இராகம் ஆரபி தாளம் ஆதி.

பல்லவி

காணக் கருத்து நாடுதே - க்ரீடி யுருவாய் (காண)

அனுபல்லவி

நாணேற்றிய காண்டீபம் நலமுள்ள மச்ச ரேகை

சேணுறு மார்பில் வாகைசேர் செந்தாமரையுடன (காண)

சரணம்

வீரவிஜயனாகத் தீரகம் பீரமாய்

நேராயுமைக் காணவே கோரியிவண் வந்திட்டேன்

பாரிலிணையிலாப் பார்த்தனே யிச்சிறு

நாரிமேல்தயை வைத்து கூறியதீவாய் நாதா (காண)

---

20.

(குள்ளத்தாரா மெட்டு)

இமயமலைச் சிகரம்—இந்துமாதாவே !
ஏற்ற உன் சிங்காதனம்
சமரசமுன் விருது—இந்து மாதாவே!
சாந்தமுன்றன் பெருமை
அமைவள முன்கருணை—இந்து மாதாவே !
அறிவினரசீ நமோ !
இமையெனக் காப்போமுனை—இந்து மாதாவே !
இன்பமுமே ஈஸ்வரியே !

---

(21)

('தெய்வமே நானென்ற' மெட்டு)

பாரதவீரருள் பார்தொழு தேத்தும்
தீரவிஜயன் சுபத்திரையை அடைந்தார் (பா)
தேவர்கள் முனிவரர் தேடரு பெரியோர்
மூவர்கள் மனமுடன் முடித்த நன் மணமே (பா)
புலன்கள் புனிதமுறப் புன்மைகளகல
நலன்பெற நல்லோரை நாடுவோம் நாமே (பா)
பட்டுலேஞ்சி சந்தனம் பாக்கு வெற்றிலைமேல்
இட்டமான வுண்டி இசைந்தளிப்பாரே (பா)
கண்ணனின் சேவகம் களித்துமே செய்வோம்
தண்ணருளெய்தித் தளிரடி சேர்வோம் (பா)

---

(22)

நோட்டு.

ஒத்து மனமுற்று நாம்
வெற்றி கொள்வாம்
பற்றிப்பின்பற்றி யோடிப் பார்ப்போமொருகை நாம்!

(23)

இராகம் கல்யாணி. தாளம் சாப்பு.

பல்லவி

அருமையுள்ள வெனம்மையே !- பாஞ்சாலியிச்
சிறுமிக்குன்குற் றேவல் செய்யும்
[பெருமையீவாய் (அரு)

அனு பல்லவி.

பொறுமைக் கணிகலமே !
பொற் றொடியே யென்தேவி ! (அரு)

சரணம்

நித்தியமுன் பாதம் நேசமுடன் தொழுவேன்
சத்தியவல் லியே ! சாந்தஸ் வரூபிதாயே !
பக்தி யோடுனைப் போற்றினேனென்
நித்யமங்கள ரூபியே யருள்
சக்தியே ! சர்வேஸ்வரீ நீயே !
பக்தரக்ஷமாம் பாஹி யம்பிகை ! (அரு)

---

(24)

இராகம் மோகனம். தாளம் ஆதி.

பல்லவி

ஆதியரும் பொருளாய் நின்றவனே யன்பர்க்
கானந்தவமிழ் தினைத் தந்தவனே (ஆதி)

அனு பல்லவி

சோதி சிம்மமாகப் ரஹ்லாதனைக் காத்ததும்
நீதி ராமனுய்த் தசக்ரீவனைத்த றித்ததும்
கீதக்ருஷ் ணனுய்த் தர்மம் க்ரீடிக்கு உரைத்ததும்
நீதியை நாட்டவே நீயவத ரித்ததும் (ஆதி)

சரணம்.

சுந் தரமோகினியாய்ச் சூரனைச் சுட்டதும்
மந்தரத்தாற் கடைந்து மறைபொருள் மீட்டதும்
இந்த்ராதி தேவர்கட்கு இசைந்தமு திட்டதும்
சந்தத ஞ்சிந்திப் போரின் முந்து வினை விட்டதும்

வாசனே! தாசர் விஸ்வாசப் ரகாசனே!
ஈசனேநேசனே! பாசத்தின் நாசனே!
வியாசபராசரர் சுரர்தொழு கேசனே!
வாசனே! கோபியர் ஆசை விஸ்வேசனே (ஆதி)

---

(25)

இராகம் சுருட்டி — தாளம் சாப்பு

பல்லவி

பாரிற் கெழில் நல்கு நம் பாரதிக்கு மங்களம்
பாரேத்தும் பாரத வீரர்க்கு மங்களம் (பா)

அநு பல்லவி

நேர்மையாம் நம் நீதி மன்னர்க்கு மங்களம்!
சீர்பெற்றிலங்குஞ் ஜெயக்கொடி தனக்கு மங்களம்! (பா)

சரணம்

நாவினுக் கருந்துணை நாமகட்கு மங்களம்
பூவின் பத்தினிகட்கும் புனிதற்கு மங்களம்
நாபிகமலத்தில் நான் முகனை நயந்தீன்ற
பாப விமோசனர் பக்தர்க் கென்று மங்களம் (பா)

(அநுபந்தம் முற்றிற்று.)

சுபம்.

PRINTED AT THE INDIA PRINTING WORKS, MADRAS.

4003

## இந்த ஆசிரியரா லெழுதப்பெற்ற

### இனி வெளிவரும் நாடகங்கள்.

1. விரத வைராக்கிய தீபிகை
2. ஜெய வீரன்
3. லக்ஷ்மீ விஜயம்
4. பதுமாவதீயம்.
5. பாரத சங்கம்
6. சுத்தமதம்.

இப்புத்தகங்கள் வேண்டுவோர் இந்நூலாசிரியரின் விலாசத்திற் கெழுதிப்பெற்றுக் கொள்ளலாம்.

J. VENKATASUBRAMANIA BARATI,
*KATUPUTUR.*